பக்கங்கள்: பத்து

Registered as a News Paper

# உதயன்

விலை ரூபா 6.00

பிந்திய பதிப்பு

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2030 மார்கழி 07 புதன்கிழமை (22-12-1999) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்:23

# சந்திரிகா முன்னணியில்!

## வெற்றியைத் தீர்மானிப்பதற்கு 2ஆம் கட்ட எண்ணிக்கை அவசியம்?



கொழும்பு,டிசெம்பர்22

**இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் வாக்களிப்பு எண்ணிக்கையில் முற்கூட்டிக்கிடைத்த தகவல்களின்படி பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளரும் தற்போதைய ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க முன்னணியில் இருக்கின்றார்.**

எனினும் கொழும்பிலும், மலையக மாவட்டங்களிலும், கிழக்கில் சில தொகுதிகளிலும் ஐ.தே.கட்சி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவே முன்னணியில் நிற்கின்றார்.

பல தொகுதிகளில் இரு வேட்பாளர்களுக்கும் இடையிலான வாக்குகள் வித்தியாசம் மிகக்குறைவாக இருப்பதால் வெற்றியைத் தீர்மானிப்பதற்கு இரண்டாவது தெரிவு வாக்குகளை எண்ணவேண்டிய நிலை ஏற்படலாம் என்ற ஒரு கருத்து இன்று காலையில் கொழும்பு அவதானிகள் வட்டாரங்களில் நிலவியது.

### நாடு முழுவதும் நேற்றிரவு ஊரடங்கு

கொழும்பு,டிசெ.22

நாடு முழுவதிலும் நேற்றிரவு 11 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட ஊரடங்குச்சட்டம் இன்று காலை 6 மணியுடன் நீக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

தேர்தல் வாக்களிப்பை தொடர்ந்து அமைதியை பேணுவதற்காக ஊரடங்குச்சட்டம் அமுல்செய்யப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தென்பகுதியில் வாக்களிப்பை தொடர்ந்து பெரும் வன்முறைச் சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றதாக இச்செய்தி அச்சுக்கு போகும்வரை தகவல் கிடைக்கவில்லை. (ஐ-3-6)

### குடாநாட்டுக்கான தொலைபேசி நேற்று நள்ளிரவுடன் 'அவுட்'

யாழ்ப்பாணம்,டிசெ.22

குடாநாட்டுக்கும் வெளியிடங்களுக்குமான தொலைபேசிச் சேவை நேற்று நள்ளிரவு 12.37 மணியளவில் செயலிழந்தது.

தொலைபேசிப் பரிமாற்றத்துக்கான சமிக்ஞை நேற்று இரவு திடீரென நின்றுவிட்டது என்றும் - இதற்கான காரணம் என்ன என்பது உடனடியாகத் தெரியவில்லை என்றும் - ரெலிக்கொம் நிறுவன வட்டாரங்கள் நேற்றிரவு தெரிவித்தன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு., திருமலை, வவுனியாவில் நேற்று சுமுகமான வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

வடக்கு - கிழக்கில் சகல மாவட்டங்களிலும் நேற்று வாக்களிப்பு சுமுகமாக நடைபெற்றதாக எமது மாவட்டச் செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

வவுனியா மாவட்டத்தில் 45சதவீதமும் மன்னாரில் 30சதவீதமும் வாக்குப்பதிவு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

வன்னியில் இராணுவக்கட்டுப்பாடற்ற பிரதேசத்து மக்கள் வாக்களிப்பதற்காக வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக வாக்களிப்பு நிலையங்களுக்கு ஒருசிலரே சென்று வாக்களித்ததாகக் கூறப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் 75சதவீதமானவர்கள் வாக்களித்ததாக கணிப்பீடுகள் தெரிவித்தன. புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைச் சேர்ந்தவர்கள் வாக்களிப்பதற்காக மட்டக்களப்பு நகரில் அமைக்கப்பட்டிருந்த வாக்களிப்பு நிலையங்களுக்கு வெளியே மக்கள் நீண்ட வரிசையில் நின்று வாக்களித்ததாக எமது செய்தியாளர் அறிவிக்கின்றார்.

அம்பாறை மாவட்டத்திலும் சுமாரான வாக்குப்பதிவு இடம்பெற்றதாகக் கூறப்பட்டது. 75 சதவீதத்துக்கும் கூடுதலானோர் வாக்களித்தனர்.

திருகோணமலை மாவட்டத்தில் 75 சதவீதமானவர்கள் வாக்களித்தனர். காலையில் மந்தமாக இருந்த வாக்களிப்பு பிற்பகலில் சூடு பிடித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3-164-21-150)

## யாழ்.குடாநாட்டில் அமைதியான வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

குடாநாட்டில் நேற்று தேர்தல் வாக்களிப்பு மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றது. தேர்தலுடன் தொடர்புடைய வன்செயல் சம்பவங்கள் எதுவும் இடம்பெற்றதாக நேற்று இரவு வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

காலையில் மந்தமாகவும் நண்பகலுக்குப் பின்னர் சுமாராகவும் வாக்குப்பதிவு இடம்பெற்றதாக எமது பிரதேசச் செய்தியாளர்கள் அறிவிக்கின்றனர்.

யாழ்.நகரப் பகுதியில் வாக்களிப்பு மிகவும் மந்தகதியிலேயே இடம்பெற்றது. வாக்களிப்பு நிலையங்களில் பொலீஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்தனர். முக்கிய சந்தைப் பகுதிகள் நேற்று இயங்காததால் சில இடங்களில் வீதிகள் சனநடமாட்டமின்றிக் காணப்பட்டன.

குடாநாட்டில் 35 சதவீத வாக்குப் பதிவு இடம்பெற்றிருப்பதாக தேர்தல் பிரிவினர் தெரிவித்தனர்.

வாக்குகளை எண்ணும் பணி யாழ். செயலகத்தில் நேற்றிரவு சுமார் 10.30 மணியளவிலேயே ஆரம்பமானது.

(ஐ-3-27-31-90-117-175-173-180)

### பிரதி அமைச்சரின் கார் மீது சூடு

கொழும்பு,டிசெ.22

பேருவளையில் நேற்றுப் பிற்பகல் 3.15 மணியளவில் காரில் சென்றுகொண்டிருந்த புத்தசாசன பிரதி அமைச்சர் எதிரிவீர பிரேமரத்ன மீது சிலர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

அவர் உடனடியாக காரை நிறுத்திவிட்டுத் தப்பிஓடி வீடு ஒன்றில் ஒளித்துத் தப்பினார் என்றும் -

கார் பலத்த சேதத்துக்குள்ளானதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

கடந்த சில தினங்களாக அவர் அங்கு பல தாக்குதல்களை ஐ,தே.க ஆதரவாளர்களுக்கு எதிராக மேற்கொண்டார் என்று குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது. (ஐ-3)

### பிந்திய செய்தி

## முதலில் வெளியான 31 முடிவுகளில் சந்திரிகாவுக்கு 50 சதவீத வாக்குகள்

கொழும்பு,டிசெ.22

ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளில் இன்று காலை வரை வெளியாகிய 31 தொகுதிகளின் முடிவின் அடிப்படையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க 50 வீதத்துக்கும் மேற்பட்ட வாக்குகளைப் பெற்றுள்ளார்.

3 லட்சத்து 62 ஆயிரத்து 298 வாக்குகள் சந்திரிகாவுக்கு கிடைத்துள்ளன. இது 31 தொகுதிகளின் செல்லுபடியான வாக்குகளில் 50.43 சதவீதமாகும்.

இரண்டாவது நிலையில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவிற்கு 3லட்சத்து 562 வாக்குகள் கிடைத்துள்ளன. இது 42.25 சதவீதமாகும்.

ஜே.வி.பி. வேட்பாளர் நந்தன குணதிலக 38 ஆயிரத்து 253 வாக்குகளைப்பெற்று மூன்றாவது நிலையில் உள்ளார். (ஐ-3)

## தேர்தல் வன்முறைகளில் தெற்கில் எண்மர் பலி!

கொழும்பு.டிசெ.22

ஜனாதிபதி தேர்தல் வாக்களிப்புத் தினமான நேற்றுமட்டும் இருநூறு வன்செயல் சம்பவங்கள் தொடர்பாக முறைப்பாடு செய்யப்பட்டதாக பொலீஸார் தெரிவித்தனர்.

நேற்று பல்வேறு இடங்களில் இடம்பெற்ற சம்பவங்களில் எட்டுப்பேர் கொல்லப்பட்டுள்ளனர். 70பேர் காயமடைந்தனர்.

கண்டியில் வாக்களிப்பு நிலையம் ஒன்றுக்கு அருகில் குண்டு ஒன்று வெடித்தது; சேதம்ஏதும் ஏற்படவில்லை.

மாவத்தகமவில் கள்ள வாக்குப் போட முயற்சித்த பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் மீது பொலீஸார் மேற்கொண்ட துப்பாக்கிப்பிரயோகத்தில் இருவர் கொல்லப்பட்டனர்.

அனுராதபுரம், மினுவாங்கொடை, வெலிக்கடை ஆகியஇடங்களில் இடம்பெற்ற மோதல்களில் ஐ.தே.க ஆதரவாளர்கள் நால்வர் கொல்லப்பட்டனர்.

வன்முறைச்சம்பவங்கள்தொடர்பாக இலங்கைவானொலி தெரிவித்ததாவது:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாக்களிப்பை அடுத்து அம்பாறையில் கலவரம்

-உதயன் அம்பாறைச் செய்தியாளர் ஏ.எல்.எம்.சலீம்-

அம்பாறை,டிசெ.22

அம்பாறை மாவட்டம் திகாமடுல்ல தேர்தல் பிரிவில் வாக்களிப்பைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்செயல்களை அடுத்து அங்கு நேற்று மாலை 6 மணிமுதல் ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டது.

தமிழ், முஸ்லிம் மக்கள் அதிகமாக வசிக்கும் கல்முனை, தெகியத்தைக்கண்டி,பொத்துவில்,சம்மாந்துறை ஆகிய பகுதிகளிலேயே ஊரடங்கு அமுல் செய்யப்பட்டது.

இப் பகுதிகளில் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களுக்கும் ஐ.தே. கட்சி ஆதரவாளர்களுக்கும் இடையே மோதல்கள் இடம்பெற்றிருக்கின்றன.

சில வாகனங்கள் எரிக்கப்பட்டும், சேதப்படுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்ட்து.

நேற்று மாலை அமுலுக்கு வந்த ஊரடங்கு இன்று அதிகாலை 4 மணியுடன் நீக்கப்படஇருந்தது. (ஐ-3-14)

## நேற்றுப் பகல் வேளை சோதனைகள் தளர்வு

### 'சென்றி'களில் படையினர் இல்லை

யாழ்ப்பாணம்,டிசெ.22

நேற்று ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற்றசமயம் - பகல் வேளை - குடாநாட்டில் படையினரின் வழமையான சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டிருந்தன.

யாழ். நகரிலும் வெளியே ஏனைய இடங்களிலும் வீதிச்சோதனைகள் நேற்றுக் காலை முதல் மாலை வரை நடைபெறவில்லை.

பெரும்பாலான வீதிச்சோதனை நிலையங்களில் மாலை வரை படையினர் காணப்படவில்லை. வீதிகளில் சோதனைகள் இடம்பெறாததால் பொதுமக்கள் இடையூறு இன்றி இலகுவாகப் போக்குவரத்துச் செய்வதைக் காணக்கூடியதாக இருந்தது. இதனால் வாக்காளர்கள் இடையூறு ஏதுமின்றி வாக்களிப்பு நிலையத்துக்குச் செல்லமுடிந்தது. நேற்று மாலையில் படையினர் மீண்டும் தமதுசென்றிகளுக்குத் திரும்பினர். (ஐ-3-4-6-8)

## கரையோரப் பகுதி மீது நேற்றும் ஷெல் வீச்சு!

கொழும்புத்துறைக் கரையோரப் பகுதிகளில் நேற்றுகாலை 6.45 மணியளவில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன.

முத்துமாரி அம்மன் கோவிலுக்கு பின்புறமாகவுள்ள தென்னந்தோட்டத்தில் ஷெல்கள் வீழ்ந்து வெடித்தபோதும் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இதேவேளை -

கேரதீவு - சங்குப்பிட்டி பகுதிகளில் நேற்றுக்காலை 10 மணியளவில் கிபிர் விமானங்கள் தாக்குதல் நடத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-17)

இளைய தலைமுறையின் இதயம் வரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்: 13 — 08 — 1963



ஆண்டவன் அடியில் 22 — 12 — 1998

## இராசையா இரகுநாதன்

எம்மோடு இனிதாய்ப் பிறந்தீரே!
பிரான்ஸில் வாழ்வைத் தொடர்ந்தீரே!
இல் வாழ்வு எனும் தோணியைத் தொடர முன்
காலனவன் நோயாக வந்து அழைத்தானோ!

உமது ஆத்மா சாந்திக்காக பிரார்த்திக்கும்:
ஐயா, அம்மா, சகோதர, சகோதரிகள்,
மச்சான்மார்கள், மச்சாள்மார்கள், பெறாமக்கள்,
மருமக்கள், உற்றார், உறவினர்கள்.

ஸ்ரேசன் றோட்,
கோண்டாவில். (71965)

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா சரவணமுத்து
(இளைப்பாறிய ஆசிரியர்)

சங்குவேலியைப் பிறப்பிடமாகவும் முத்திரைச் சந்தையை இருப்பிடமாகவும் தற்போது நாவற்குழி தச்சன்தோப்பை தற்போதைய வசிப்பிடமாகக் கொண்டவரான கந்தையா சரவணமுத்து அவர்கள் 21-12-1999 அன்று சிவபதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற காமாட்சிப்பிள்ளையின் அன்புக்கணவரும் சிவஞானம், அன்னபூரணம், கந்தசாமி, யோகவதி, சொர்ணமலர் ஆகியோரின் சிறிய தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22-12-99) புதன்கிழமை பகல் 11.30 மணியளவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
- குடும்பத்தினர்

தச்சன்தோப்பு,
நாவற்குழி. (71962)

## சிவகுரு இராமநாதன்
(ஓய்வு பெற்ற கட்டடப்பரிசோதகர்)

சுன்னாகம் மயிலணியைச்சேர்ந்தவரும் வண்ணார் பண்ணை, அரசடி ஒழுங்கை இல 17ல் வசித்தவருமாகிய சிவகுரு இராமநாதன் (ஓய்வு பெற்ற கட்டடப் பரிசோதகர்) 21-12-1999 அதிகாலை திருகோணமலையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகமுத்து சிவகுரு (ஓவசியர்) காமாட்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், தவமணிதேவியின் அன்புக் கணவரும், சிவசுதன் (பிரதேச செயலகம் வெருகல்— தலைவர், றோட்டரிக் கழகம் திருகோணமலை) அவர்களின் அன்புத் தந்தையும் காலஞ்சென்றவர்களான முத்தையா, பாக்கியம் ஆகியோரின் மருமகனுமாவார்.

இறுதிக் கிரியைகள் 471, அன்புவழிபுரம் திருகோணமலையில் நடைபெறும்.

தகவல்:
க. சின்னராசா
(மைத்துனர்)

''ஈஸ்வர வாசம்''
மயிலணி,
சுன்னாகம். (71958)

## திருமதி டேவிட்சிவக்கொழுந்து அழகம்மா

உருப்பிராயைப் பிறப்பிடமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி டேவிட் சிவக்கொழுந்து அழகம்மா அவர்கள் 18-12-99 அன்று ஹற்றன் மெதடிஸ்த குருமனையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற டேவிட் சிவக்கொழுந்துவின் அன்பு மனைவியும் அருட்திரு டேவிட்அழகராஜா (ஹற்றன் மெதடிஸ்த தேவாலயம்), டேவிட்குணராஜா (கிருபை— பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளவத்தை மெதடிஸ்த சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ஆ. அனந்தநாயகம்
(செல்வம்)

426/4, கில்னர் லேன்,
யாழ்ப்பாணம். (71961)

# நாய்களுக்கு தடுப்பூசி

நெல்லியடி, டிசெ. 22

பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள, கரவெட்டிப் பகுதியில் எதிர்வரும் 27 ஆம் திகதி வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பு ஊசி ஏற்றப்படவுள்ளது.

கவுந்தில் சனசமூக நிலையம், கலைவாணி சனசமூக நிலையம்ஆகிய இடங்களில் வைத்து காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணி வரை தடுப்பு ஊசி ஏற்றப்படவிருப்பதனால், தமதுவளர்ப்பு நாய்களை அன்றையதினம் கொண்டு வந்து ஒத்துழைப்பு வழங்குமாறு துன்னாலைப் பிரதேச பொது சுகாதார பரிசோதகர் கே, இளங்கோ தெரிவித்துள்ளார். (ஐ-109)

# தேர்தல்முடிவுகுறித்த ஆய்வுக்கருத்தரங்கு

யாழ்ப்பாணம், டிசெ. 22

யாழ். இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டிலான முழுநிலாக் கருத்தரங்கு இன்று பிற்பகல் 3—30 மணிக்கு இந்துவின் முன்னாள் அதிபர் க. சி. குகதாசன் தலைமையில் குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

இந்தக் கருத்தரங்கில் 'ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள்-ஓர் ஆய்வு' என்னும் தலைப்பிலான ஆய்வரங்கு யாழ். பல்கலைக்கழகதுணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

பேராசிரியர் எஸ். சத்தியசீலன், பேராசிரியர் பி. மணிவாசகர், விரிவுரையாளர் எஸ். இரகுநாதன் ஆகியோர் ஆய்வுரைகளை வழங்குவர். (ஐ-க-3)

SHAMROCK
யா/ ஈச்சமோட்டை
★ A/L 99
DAY CLASS
கலை, வர்த்தகப் பிரிவு
ஆரம்பம்:- 3-1-2000
திங்கள் 7 A M
★ A/L 2002
கலை. வர்த்தக,
விஞ்ஞான, கணித பிரிவுகள்
ஆரம்பம்: 5-1-2000
புதன் 3. P-M
(சி/10287)

லிபேட்டி அச்சுவேலி
அருண்பாண்டியன்,
நெப்போலியன்
நடித்த
★ சிவன்
(புதிய வெளியீடு)
காட்சிகள்: 10-30, 2-30
T.P.No.070-212223
070-212678
(71907)

ரா
10 !!
நாளை உங்களுக்கு
ஓர் அன்பான அழைப்பு
இவ்விடத்தை நோக்குக
புரியும் புரியாத புதிர்
(சி/10183)

# குளித்துக்கொண்டிருந்த பெண் சூட்டுக்கு இலக்காகிக் காயம்

## தாழையடியில் சம்பவம்

யாழ்ப்பாணம், டிசெ. 22

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்த நிலையில் பெண் ஒருவர் நேற்று முன்தினம் இரவு யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாழையடி, வத்திராயனைச் சேர்ந்த திருமதி ஏ. இந்திராதேவி (வயது 48) என்பவரே காயமடைந்தவராவார்.

நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் தாழையடிப் பகுதியில் சில ஷெல்கள் வீழ்ந்து வெடித்ததாகவும் — அதைத் தொடர்ந்து இராணுவத்தினர் சரமாரியாகத் துப்பாக்கிப் பிரயோகம் செய்த போது வீட்டில் கிணற்றடியில் குளித்துக் கொண்டிருந்த பிரஸ்தாபப் பெண் காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாகப் பளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-9-10)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி நல்லம்மா தம்பிஐயா

நவாலி தெற்கை பிறப்பிடமாகவும் உரும்பிராய் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா தம்பிஐயா அவர்கள் 21-12-99 அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயாவின் (முன்னாள் பிரபல வர்த்தகர்-நானு ஓயா) அன்பு மனைவியும், சிவக்கொழுந்து. காலஞ்சென்ற தர்மலிங்கம் ஆகியோரின் சகோதரியும், நடேசன் (லயன்), லக்ஷ்மிதேவி (ஆஸ்திரேலியா), தியாகராஜா (டென்மார்க்), செல்வராஜா (கனடா), மகேஸ்வரன் (கொழும்பு), புவனேஸ்வரி(கொழும்பு), கிருஷ்ணானந்தன் (என்ஜினியர், கொங்கொங்), இளங்கோவன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சரோஜினிதேவி, அருளேஸ்வரன் (ஆஸ்திரேலியா), விஜயா (டென்மார்க்), கமலா (கொழும்பு), நந்தா (கொழும்பு), லோகநாதன் (இன்டஸ்ரியல் பினான்ஸ் கம்பனி, கொழும்பு), சிவேஸ்வரி(கொங்கொங்), லதா(கனடா), ஆகியோரின் மாமியாரும், சுரேன்(சிங்கப்பூர்), சுஜிதரன், கிஷோன்மாறன், மகின் (லண்டன்), மகிளினி(ஆஸ்திரேலியா), வாகிஷன் (டென்மார்க்), நிஷ்ஷா(டென்மார்க்) பிரதிகா, மீஷான். சகான், குஷான், குவிதா, கிருஷ்ஷாணி, ஜஜீந்தா, மதன், ஜொனதாஸ். அஜந்தன், ஷரிஸ் (யாவரும் கொழும்பு), நந்தன் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பேர்த்தியாரும், அலிசியா, ரோசிகா (இருவரும் ஆஸ்திரேலியா) ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் இன்று (22-12-99) புதன்கிழமை முற்பகல் 11.00 (புதிய நேரம்) மணிக்கு நடைபெற்று பூதவுடல் உரும்பிராய் வேம்பன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
லயன் திரு. த. நடேசன்
(மகன்)

வேம்பன் வீதி,
உரும்பிராய் தெற்கு.
உரும்பிராய். (71960)

## திருமதி சுப்பிரமணியம் பாக்கியம்

கொக்குவில் மேற்கு, மணியர்பதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் பாக்கியம் அவர்கள் நேற்று (21-12-99) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரம் - அன்னம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வியும் பிரபல வர்த்தகரும் உத்தரவு பெற்ற வியாபாரியுமான சுப்பிரமணியம் A D அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா, சுப்பிரமணியம் மற்றும் செல்லாச்சி, சபாரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான பவளம், தருமலிங்கம், தம்பித்துரை ஆகியோரின் மைத்துனியும் பரமேஸ்வரி, இராஜேஸ்வரி (ஜேர்மனி) நாகேஸ்வரி, சொர்ணலட்சுமி, புஸ்பரத்தினம், யோகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தாயாரும் காலஞ்சென்ற குலவீரசிங்கம் (நில அளவைப் படவரைஞர்), மகாதேவா (ஜேர்மனி), பஞ்சரத்தினம் (முன்னாள் மஸ்கன் ஊழியர்), அன்னலிங்கம் (இளைப்பாறிய தபாலதிபர்), இராசலிங்கம் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமியும் தவரட்ணம், சிவசுதா (கொழும்பு). புவிராஜ் சோபா (கொழும்பு), சைலஜா (கொழும்பு), பார்த்தீபன் (ஜேர்மனி), பிரேம்குமார் நிஷாநதி (ஜேர்மனி), தேவராஜன் சோபிகா (பிரான்ஸ்), வரதராஜன் சுரேகா (லண்டன்), முகுந்தன் (லண்டன்), நளாயினி (கொழும்பு), மிரஞ்சினி (பிரதேச சபை, கொக்குவில்), சிவமகளிர் (டென்மார்க்), கௌரிசங்கர் (டென்மார்க்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் கொழும்பிலுள்ள காயத்திரி, ஜீவகாருணயன், வைசாலி, ஜேர்மனியைச் சேர்ந்த அதீனா, அதீனன், பிரான்சைச் சேர்ந்த றோகான், வினோத், லண்டனிலுள்ள மதன், சுமன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (22-12-99) புதன்கிழமை பகல் 1 மணிக்கு இறுதிக்கிரியைகளுக்காகக் கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்

மணியர் பதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில். (71959)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## ரோசம் வராதா?

யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தில் பயின்று டாக்டர்களானவர்கள் மற்றும் தமிழ் டாக்டர்கள் குடாநாட்டில் பணி செய்யாது வேறு இடங்களுக்குச் சென்று தொழில்புரிவது நீண்டகாலமாக பல தரப்பாரினதும் விமர்சனத்துக்கு உள்ளாகி வரும் விடயமாகும்.

குடாநாட்டில் உள்ள ஆஸ்பத்திரிகளில் டாக்டர்களுக்குப் பெரும் பற்றாக்குறை நிலவும் வேளையில், தமிழ் டாக்டர்கள் எமது பிரதேச நோயாளர்களின் — மக்களின் — நலனை முற்றிலும் புறக்கணித்துத் தமது சொந்த நலன்களை மட்டுமே முன்னிறுத்தி வெளியிடங்களுக்குச் செல்கிறார்கள்.

நொந்துபோயுள்ள எமது மக்களுக்குச் சேவை செய்வது தங்களது கடமை என்பதனை மறந்து விடுகிறார்கள். உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்யும் அவர்களின் இந்தப் போக்கை மக்கள் வெறுக்கிறார்கள்; கண்டிக்கிறார்கள்.

இப்போது, டாக்டர் ஒருவரே இங்கு பணி புரியாது வெளியிடங்களுக்குச் சுகம் தேடிப் பாய்ந்தோடும் டாக்டர்களை மிகக் காட்டமாகக் கண்டித்திருக்கிறார்.

எமது மண்ணில் படித்து டாக்டர் பட்டம் பெற்றவர்கள் எமது இனத்தை மறந்து இன்று வெளியிடங்களுக்குப் பணியாற்றச் செல்வது நோயாளிகளுக்குச் செய்யும் பெருந்துரோகமாகும் — என்று பருத்தித்துறை மாவட்ட அதிகாரியாகக் கடமையேற்ற டாக்டர் கே. மயிலேறும் பெருமாள் தெரிவித்திருக்கிறார்.

தொழில் ரீதியாகத் தமது "சொந்தக்காரனாக" உள்ள மந்திகை வைத்தியசாலை அதிகாரி கூறுவது, பறந்து சென்ற, பறந்து செல்லும் டாக்டர்களின் மனங்களை நெருடுமா?

ஆனால் பருத்தித்துறை மாவட்ட அதிகாரிக்கு உள்ள மண் உணர்வும் சொந்த மக்கள் உணர்வும் இங்கு படித்த, இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த ஏனைய டாக்டர்களுக்கு இல்லாமற் போனது ஏன்? — என்பதனை எவராலும் விளங்கிக் கொள்ள முடியாதுள்ளது:

வெளிநாடுகளில் பணி புரிந்த டாக்டர்கள் ஒரு சிலர் தமது வசதிகளைத்துறந்துஇங்குவந்து பணியாற்றுகிறார்கள். அவர்களைப் பார்த்துக் கூட, இங்கிருந்து பறப்போர் அதனை நிறுத்துவதாக இல்லை.

தென்னிலங்கையில் இருந்து வந்து டாக்டர்கள் இங்கு பணி புரிந்தார்கள், பதற்ற நிலை கருதி அவர்கள் சொந்த இடங்களுக்குச் சென்ற போதிலும் அவர்கள் மீண்டும் வந்துசேவையாற்றார் என்று முற்றுப்புள்ளி வைத்துவிட முடியாது.

யாழ்ப்பாணத்தில் முன்னர்— எழுபதுகளில்—அரசாங்க அதிபராகப் பணிபுரிந்தவர் விமல் அமரசேகரா. அவரது புதல்வர் ஒருவர் இப்போது டாக்டர். யாழ்ப்பாணத்தில் டாக்டர்கள் பற்றாக்குறை என்பதனை அறிந்து இங்கு வந்து ஒன்றரை வருடங்கள் பணியாற்றினார்.

அவர் தமது கடமைக் காலம் முடிந்து கொழும்பு திரும்பியுள்ளார். உயர் அரச அதிகாரி ஒருவர் அவரை விமான நிலைய மதில் சந்தித்தார். அவ்வேளை அந்த டாக்டர் பின்வருமாறு கூறினார் என்று அறிய வந்தது:

நான் பிறந்தது யாழ்ப்பாணத்தில், சிறிது காலம் இங்கு கல்வி கற்றுள்ளேன். நான் பிறந்த மண்ணுக்குச் சேவை செய்தேன் என்ற பூரண மகிழ்ச்சியுடன் திரும்பிச் செல்கிறேன். எனக்குள்ள கடமையைச் செய்தேன் என்ற திருப்தியுடனும் பேசுகிறேன் — என்றாரவர்.

இத்தகைய உணர்வு, மனித நேயம் தமிழ் டாக்டர்களுக்கு வரமாட்டாதா? இதனைக் கேட்டாவது அவர்களுக்கு ரோசம் வருமா?

# புலிகளின் ஊடுருவலைத் தடுக்க
# தமிழகத்தில் பாதுகாப்பு தீவிரம்

சென்னை, டிசெ. 22
கொழும்பில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் இறுதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நிகழ்ந்த பெரும் குண்டு வெடிப்பைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டுக்குள் ஊடுருவதைத் தவிர்ப்பதற்காக திருச்சி மாவட்டத்தில் பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப் படுத்தப்பட்டுள்ளன.

மாவட்ட பொலீஸ் கண்காணிப்பாளர் ஜெயந் முரளி இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் இரவு செய்தியாளரிடம் பேசிய போது அவர் இதனைத் தெரிவித்தார்.

வாழவந்தான் கோட்டை கோட்டப்பட்டு ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள இலங்கைத் தமிழர்களுக்கான சிறப்பு அகதி முகாம்களில் பாதுகாப்பு தீவிரப்படுத்தப் பட்டுள்ளது என்றும்—

இந்த முகாம்களில் சந்தேகத்துக்குரியவர்களின் நடமாட்டத்தைக் கண்காணிக்க என சீருடை அணியாத பொலீஸார் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்றும்—

பொலீஸாரின் ரோந்துப் பணியும் சோதனைகளும் தீவிரப்படுத்தப்பட்டு தங்கும் விடுதிகளிலும் திடீர்சோதனைகள் இடம்பெற்று வருகின்றன என்றும்—

அவர்மேலும்தெரிவித்தார்.

அதேசமயம்—

புதுக்கோட்டை மாவட்டத்தில் கடலோர ரோந்துப் பணிகள் மேலும் தீவிரப்படுத்தப் பட்டுள்ளதாக கடலோர பாதுகாப்பு பிரிவு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6-9-5

## நிரந்தர நியமனம்

வலி. தென்மேற்கு.டிசெ. 22
சமுர்த்தி அதிகாரசபையினால் சண்டிலிப்பாய்- வலி. தென்மேற்கு பிரதேச செயலகத்துக்கு 13 பேர் முதலாம் தர சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாக நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

கடந்த 11-2-98 முதல் தற்காலிகமாக நியமனம் பெற்ற 13 பேரே நிரந்தர நியமனம் பெறுகின்றனர் என பிரதேச செயலர் கா. சந்திரராசா தெரிவித்தார்.

நிரந்தர நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

செல்வி. எஸ். ஜெயந்தி (சுதுமலை தெற்கு), திருமதி எஸ். ரேவதி (சாவற்காடு), பி. சசிகரன் (உயரப் புலம்), எஸ். சதீஷ்(நவாலி வடக்கு), எஸ். ஜெயராஜ் (இளவாலை), ஆர். புகிலகிறி (நவாலி தெற்கு), திருமதி கே.றோகினி[மாரீசன்கூடல்) செல்வி வி. வதனி (பிரான் பற்று), செல்வி எஸ். விஜய சொரூபி (பண்டத்தரிப்பு), செல்வி ஐ. தர்சிகா (சண்டிலிப்பாய் மத்தி), எஸ். பாஸ்கரன் [மானிப்பாய்மேற்கு), செல்வி ஏ. பிலோமினா [மானிப்பாய்கிழக்கு], ரி'ரவிச் சந்திரன் [மானிப்பாய் வடக்கு] (இ-185)

## எரிபொருள் போதிய அளவு கையிருப்பில்

அரியாலை, டிசெ. 22
யாழ்ப்பாணத்தில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை என்றும் எரிபொருள் போதியளவு கையிருப்பில் உள்ளதாகவும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் யாழ். பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மண்எண்ணெய்க்கு செயற்கைத் தட்டுப்பாட்டை உண்டாக்கி சிலர் கள்ளச் சந்தையில் மண்எண்ணெய்யின் விலையை அதிகரித்து விற்பனை செய்வதாகவும் இதனால் பாவனையாளர்கள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

தற்போது மண்எண்ணெய் சகல எரிபொருள் விற்பனை முகவர் நிலையங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுவருவதாகவும் பாவனையாளர்கள் வீணாக அலைந்து மண்எண்ணெய்க்கு சிரமப்பட வேண்டிய அவசியம் இல்லை என்றும் அவர் கூறினார். (இ-17)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

இளவாலை றோமன் கத்தோலிக்க பாடசாலையில் ஏற்பட உள்ள அதிபர் வெற்றிடத்தை நிரப்புவதற்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தகுதியான அதிபர்களோ ஆசிரியர்களோ தமது விண்ணப்பங்களை அதிபர் வெற்றிடப் படிவத்தில் நிரப்பி வலிகாமம் கல்வி வலயத்தில் சேர்ப்பிக்குமாறு அறிவிக்கப் பட்டுள்ளது. (இ-102)

## கிளை மாற்றம்

தென்மராட்சி, டிசெ. 22
சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 23 ஆம் இலக்க கோயில்குடியிருப்புக் கிளை சங்கத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள கட்டடத்துக்குத் தற்காலிகமாக மாற்றப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் செ. சுப்பிரமணியம் தெரிவித்தார். (இ- [illegible]17)

## பல்கலை, விடுமுறை

யாழ். பல்கலைக்கழக கலை, வர்த்தக முகாமைத்துவ பீட அனைத்து வருட மாணவர்களுக்கும் கடந்த 17ஆம் திகதி விடுமுறைவிடப் பட்டுள்ளது முதலாம் வருட மாணவர்களுக்கு அடுத்த மாதம் 3 ஆம் திகதியும் ஏனைய வருட மாணவர்களுக்கு 17ஆம் திகதியும் இரண்டாம் தவணை விரிவுரைகள் ஆரம்பமாகும். [இ-72)

# வர்த்தக நிலையங்களில் கொடிகாமத்தில் சோதனை

தென்மராட்சி, டிசெ. 22
கொடிகாமம் நகர்ப் பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்கள் மீது சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனை நடத்தியதில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த காலாவதியான பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு அழிக்கப் பட்டன.

கடந்த வாரம் நடத்திய திடீர் பரிசோதனையின் போது காலாவதியான பிஸ்கெட், இனிப்பு வகைகள், பால்மா வகைகள், ஜாம் வகைகள், மாஜரின் உட்பட பல உணவுப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப் பட்டன என்று கொடிகாமம் பொது சுகாதார பரிசோதகர் க. தெய்வேந்திரம் தெரிவித்தார். (இ-117)

## படையினர் வாபஸானதை அடுத்து
# பருத்தித்துறை முனையில் மீண்டும் கடற்றொழிலாளர் குடியேற்றத்திட்டம்

பருத்தித்துறைமுனைக் கடற்கரையோரத்தில் படையினரின் பாவனையில் இருந்த கடற்றொழிலாளர் குடியிருப்புப் பகுதியில் இருந்து படையினர் வாபஸ்பெற்றுள்ளனர்.

இதைத் தொடர்ந்து அந்தப் பகுதியில் 50 வீடுகளை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

பிரதேச செயலரும் மீள் குடியமர்வு அதிகார சபையினரும் அப் பகுதிகளைச் சென்று பார்வையிட்டனர்.

அப்பகுதியில் வசித்த ஐம்பது மீனவக் குடும்பங்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கு அவர்கள் சம்மதித்துள்ளனர்.

இந்த வேலைகளை அவர்கள் பருத்தித்துறை முனை மீன்பிடிப்பாளர் சங்கத்திடம் ஒப்படைத்துள்ளனர்.

ஒவ்வொரு வீடும் ஐம்பதினாயிரம்ரூபா செலவில் கட்டி முடிக்கப்படவுள்ளன வீட்டுச் சொந்தக்காரர்கள் அயலவர்கள் ஆகியோரின் சரீர உதவியுடன் மேற்படி பணிகளைச் செய்து முடிக்க வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது

கட்டடத்துக்குத் தேவையான சிமெந்து, மரம், கூரைத்தகடுகள் என்பன கடற்றொழிலாளர் சங்கத்தினால் இலவசமாக வழங்கப்படும். இந்த வேலைத்திட்டம் ஜனவரி மாத முடிவுக்குள் முடிக்கப்படவேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-118)

## கோரிக்கை

குண்டுகளினால் காயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளர்களுக்கு வழங்குவதற்கு இரத்தம் தேவையென இரத்த வங்கி அறிவித்துள்ளதையடுத்து தென்மராட்சிப் பிரதேசத்திலிருந்து இரத்தம் வழங்க விரும்புவோரிடமிருந்து இரத்தம் பெற்றுக் கொடுக்கச் சாவகச்சேரி லயன்ஸ் கழகம் முன்வந்துள்ளது.

பிரதேசத்தில் இரத்தம் வழங்கவிரும்புவோர் கழகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கழகச் செயலாளர் வி. வி மகாலிங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கணிசமான எண்ணிக்கையினர் இரத்தம் வழங்க முன்வரும் பட்சத்தில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் வைத்து இரத்தம் பெற்றுக்கொள்ள முடியுமெனவும் அவர் தெரிவித்தார். (இ-117)

# தேர்தலுக்கு அனுப்பப்பட்ட 5 பஸ்களும் சேவைக்கு விட முடியாத நிலையில்

யாழ்ப்பாணம், டிசெ. 22
தேர்தல் பணிகளுக்கென கொழும்பிலிருந்து வடபிராந்திய போக்குவரத்துச்சபைக்கு அனுப்பப்பட்ட ஐந்து பஸ்களும் ஓட முடியாத நிலையில் இருப்பதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

25 வருடங்கள் பழமை வாய்ந்த இந்த பஸ்களை போக்குவரத்துக்கு பயன்படுத்த முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி தேர்தல் பணிகளுக்காக யாழ். மாவட்டத்துக்கு 20 பஸ்களை அனுப்புமாறு யாழ். அரச அதிபரும் படைத்தரப்பினரும் கொழும்புக்கு அறிவித்திருந்ததை தொடர்ந்தே இந்த பஸ்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

கோரப்பட்ட தொகையை விட 15 பஸ்கள் குறைத்து அனுப்பப்பட்டுள்ளதுடன் ஓட முடியாத நிலையில்உள்ள பஸ்களை கொழும்பிலிருந்து அனுப்பி வைத்துள்ளதாக விசனம் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தீவுப்பகுதி போக்குவரத்துச் சேவைக்கென வடமாகாண மீளகுடியேற்ற புனர்வாழ்வு புனரமைப்பு அதிகார சபையினால் 5 புதிய பஸ்கள் கொள்வனவு செய்யபபட்டிருந்தன.

இவற்றில் ஒரு பஸ்ஸை கொழும்பில் போக்குவரத்து சேவைக்கென எடுத்து விட்டு 4 பஸ்கள் மட்டுமே யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று கூறப்படுகிறது. (இ-5

## இடம்பெயர்வு

[illegible]கைதடி, டிசெ. 22
இதுவரையும் நாவற்குழி, தச்சந்தோப்புப் பகுதிகளிலிருந்து இடம் பெயராது ஓரளவு பாதுகாப்பெனக் கருதித் தங்கியிருந்த மக்கள், இப்பொழுது அப்பகுதிகளிலும் ஷெல்கள் வீழ்வதையடுத்து வீடுகளை விட்டு வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இடம் பெயர்ந்து செல்லும் மக்கள் கைதடிப்பகுதிகளில் உள்ள உறவினர் நண்பர்கள் வீடுகளிலும், மற்றும் ஆலயங்களிலும் தங்கி உள்ளனர். (இ-74)

## தென்மராட்சியில நிவாரணம்

தென்மராட்சி, டிசெ 22
கடந்த வாரம் தமது இருப்பிடங்களிலிருந்து வெளியேறி பாடசாலைகள் கோயில்கள், பொதுக் கட்டடங்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் வீடுகள் ஆகியவற்றில் தங்கியிருப்போருக்கு கடந்த ஞாயிறு முதல் உலர் உணவு நிவாரணப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக்கிளைக் கடைகளில் வழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

'உ' பங்கீட்டு அட்டை வைத்திருப்போருக்கு பணத்திற்கு பொருள்கள் வழங்கப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. [இ-117]

## நாளை

மார்கழி 8
வியாழக்கிழமை
திதி: பிரதமை
முன்னிரவு 10.00 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
முன்னிரவு 11.01 வரை.
உதயத்தில்
ஆருத்திரா தரிசனம்
சுபநேரம்: 7.55—9.25
ராகுகாலம்: 1.55—3.25
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## உதய வாக்கு

ஒருவன் கற்றுள்ள நூல்களின் அளவை அவனது நுண்ணறிவு விளக்கும்.
— [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காரைநகர் சிவன்கோயில் (ஈழத்துச்

## அரச அதிபரின் செய்தி

சைவமும் தமிழும் தழைத்தோங்கும், புண்ணிய பூமியாகிய காரைநகரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமான் தனது பரிவாரங்களுடன் இன்று பஞ்சரதபவனி வருகின்றார்.

இன்றைய காலச் சூழ்நிலையில் இந்தியாவில் உள்ள சிதம்பரத்திற்குச் சென்று மார்கழித் திருவாதிரை உற்சவத்தையும் தில்லைக் கூத்தன் திருநடனத்தையும் கண்டு தரிசிக்க முடியாத நம் நாட்டு சிவனடியார்களுக்கு சிதம்பரத்தில் நடைபெறுவது போன்றே பூசை வழிபாட்டு முறைகளும் ஆர்த்கிரா தர்சனமும் நடைபெறும் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் சிவன் கோயிலில் நடைபெறும் மார்கழித் திருவாதிரை உற்சவம் ஒரு வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

ஈழத்துச் சிதம்பர திருவாதிரை உற்சவம் சிறப்புற வாழ்த்துவதோடு அடியார்கள் இவ்வுற்சவத்தில் கலந்து கொண்டு தில்லைக் கூத்தனின் திருவருளைப் பெற்றுய்யும் வண்ணம் எம் பெருமானை வேண்டுகின்றேன்.

க. சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ் மாவட்டம்.

## வடம் பிடிக்க வாருங்கள்!

நடம்புரியும் நாதனுடன் ஆண்டிவேணி
ஐயப்பன்
நற்றமிழர் துயர்தீர்க்கத் தேரேறி
வருகின்றான்
வடம் பிடித்து வேண்டிடுவோம் வாருங்கள்
வருகின்ற புத்தாண்டுவளம் படைக்க
வேண்டுமென
இடம் கிடைக்க வேண்டும் எம்இடர் அகல
வேண்டும்
ஈழத்துச் சிதம்பரத்தை மனம் நினைக்க
வேண்டும்
உடன்பிறப்பு உரிமையெலாம் உடன் சேர
வேண்டும்
உலகாளும் இறைவனாலே இது நடக்க
வேண்டும்

— மதுரகவி காரை எம். பி. அருளானந்தன்

## திருப்பணிச் சபையின் செய்தி

காரைநகர் சிவன்கோயில் திருப்பணிச்சபையின் கடமைகளை 1982 இல் பொறுப்பேற்றது முதல் சேவை செய்துவரும் தொண்டுகள் யாவரும அறிந்ததே. சென்ற வருடம் ஐயனார் சிவன் இராஜகோபுர கும்பாபிஷேகத்தினையும், கோயில் மகாகும்பாபிஷேகத்தையும் நிறைவேற்றியதும், தேர்கள் யாவும் புதிதாகச் செய்ய வேண்டிய பெரும்பணி முன்னின்றது. 'முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்' என்ற வாக்கிற்கமைய பேரன்பர்கள் வழங்கிய பெருநிதியாலும் வடபகுதிக்கான புனர்வாழ்வு புனரமைப்பு அதிகாரசபைநிதியினாலும் சென்ற வருடம் குறுகிய காலத்தில் ஐயனார், அம்பாளுக்கான புதிய தேரினை நிர்மாணித்தோம். இவ்வருடம் நடராஜப் பெருமானுக்குப் பேரழகான சித்திரத்தேர் அமைத்துள்ளோம். புதிதாக அமைக்கப்பட்ட தேர்கள் யாவும் ஒன்றுசேர்ந்து திருவீதி உலாவரும் இன்றைய தேர்த் திருவிழா தெய்வாம்சம் பொருந்திய திருவாதிரைப் பெருவிழாவாக மிளிர வேண்டும். இன்றைய தினத்தில் நாம் வேண்டுவது மக்கள் மத்தியிலே சாந்தியும் சமாதானமும் ஒற்றுமையும் நிலவ எல்லாம் வல்ல கூத்தப்பெருமானை வேண்டுகின்றோம்.

செயலாளர்,
காரைநகர் சிவன்கோயில்,
திருப்பணிச்சபை.



தில்லைநடராஜப் பெருமான் தனது பரிவார மூர்த்திகளுடன் ஈழத்துச் சிதம்பரத்தில் பஞ்சரத பவனி வரும் காட்சி

## உயிர்களுக்கு வீடுபேறு தரும் ஐந்தொழில் நடன நாயகன்

ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று இரதோற்சவம் சிறப்பாக நடைபெறுகின்றது. இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில் ஆகமத்தில் சொல்லப்பட்ட விதிமுறைகளுக்கேற்பச் செய்யப்படுகின்ற பூசை வழிபாட்டு முறை போன்று காரைநகர் சிவன்கோயிலிலும் பூசை வழிபாடுகள் நடைபெற்று வருவதாலும், சிதம்பரத்தில் உள்ளதைப் போன்று நடராசர் உருவமும் ஐம்பத்தொரு சுடர் கொண்ட திருவாசி நடராஜரின் உருவத்தைச் சுற்றி அமைந்திருப்பதாலும் இவ்வாலயம் ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றிப் புகழப்படுகின்றது.

ஓர் ஆலயத்தில் வருடாந்த மகோற்சவம் நடைபெறுவதற்கு முன்னர் அவ்வாலயமும் ஆலயச் சூழலும் புனிதம் அடைகின்றன. எம்பெருமானது தெய்வீகப் பொலிவை மேன்மையுறச் செய்யும் கிரியைகளினாலும் அவற்றுக்கு ஆதார சுருதியாய் விளங்கும் மந்திரங்களினாலும் அவ்வூரே புனிதத்துவம் அடைந்து விடுகின்றது. ஈழத்துச் சிதம்பரத்தில திருவாதிரை உற்சவம் ஆரம்பித்தவுடன் காரைநகர் புனிதம் அடைந்துவிடுகின்றது.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்ததொரு இராஜோபசாரமாகும். மக்களது பக்தியின் சின்னமாக இறைவனுக்காக அர்ப்பணிக்கப்பட்ட தேரில் கலை மரபும் சமய மரபும் சங்கமமாகின்றன. அனைத்து மக்களினதும் திருப்பணிக் கைங்கரியங்களினால் உருவாகிய தேர் எண்ணற்ற கலைஞர்களது கைவண்ணத்திற்குச் சிறந்ததோர் எடுத்துக்காட்டு. எம்பெருமானது திருமேனி தாங்கி ஈழத்துச் சிதம்பரத்தில் மிகப் பிரமாண்டமான மூன்றாம் வீதியில் பஞ்சரதங்களும் பவனி வருபோது அவற்றின் நிகரற்ற கம்பீரமான தோற்றம் மக்கள் மனதைவிட்டகலாது. ஊர்கூடி தேர் இழுத்தல்'' என்ற முதுமொழிக்கேற்ப அனைத்து மக்களும் எத்தகைய வேறுபாடுகளும் இன்றிவடம் தொட்டு தேர் இழுப்பது ஓர் உன்னதக்காட்சியாகும்.

உயிர்களுக்கு வீடுபேறு தருவதற்கு ஐந்தொழில் நடனத்தை விளையாட்டாகச் செய்கின்ற சதுரப்பாடுடைய நடராஜப் பெருமான் அம்பிகை சமேதராய் ஏனைய பரிவார மூர்த்திகளுடன் தேருக்கு எழுந்தருளும் போதும் தேரில் இருந்து இறங்கி கனகசபைக்குச் செல்லும் போதும் அவர் ஆடி ஆடி வருகின்ற திருநடனக் காட்சி அடியார்களை மெய்சிலிர்க்க வைக்கும்.

இத்தகைய சிறப்புக்கள் பொருந்திய ஈழத்துச்சிதம்பரம் கடற்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள காரைநகரில் அமைந்துள்ள போதிலும் உற்சவகாலத்தில் ஆலயத்திற்கு வரும் அடியார்களுடன் கடற்படையினர் அனுசரணையுடன் நடந்து கொள்வதும் எந்தவித சிரமமும் இன்றி அடியார்கள் ஆலயத்திற்குச் சென்றுவர பாஸ் அனுமதி வழங்கிவருவதும் எம்பெருமானது தெய்வீகச் செயல் என்றே கூறவேண்டும்.

நா. சுணேசமூர்த்தி

## உதவி அரச அதிபர் வாழ்த்

ஈழத்துச் சிதம்பரத்திற்கு 1997 ஆம் விஜயம் செய்த வட பகுதிக்கான புனர்வ புனரமைப்பு அதிகார சபையினரும் யாழ் மா அரசாங்க அதிபரும் ஆல த்தினுடைய புனர வேலைகளுக்காக வடபகுதிக்கான புனரமைப் யில் இருந்து 50 லட்சம் ரூபாவை ஒதுக்கீடு தனர். இந்நிதியைப் பயன்படுத்தி ஆலயத்தின் நிர்மாணத் திருப்பணி வேலைகள் துரிதகதியி பெற்று நடராஜப் பெருமானுக்குப் புதிய சி தேரும் நிர்மாணிக்கப்பட்டு, இன்று தில்ல ராஜப் பெருமான் புதிய சித்திரத் தேரில் எழு தனது பரிவார மூர்த்திகளுடன் பஞ்சரத வருவது கண்டு சிவனடியார்கள் ஆனந்தக் க திளைக்கின்றனர் இந்த இரதோற்சவ விழ பாக நடைபெற வாழ்த்துகின்றேன்.

ஜே. எஸ். செல்வநாயகம்
ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதி

## அருட்கடாட்சம் பெறு

''ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே''

என்ற திருமுறைக்கமைய தே தரிசிக்கும் திருவாதிரைப் பெருவிழாவில் நாதன் அருள் மூர்த்தமாகிய நடராஜப் பெ னுக்கு சித்திரத்தேர் அமைத்து ஈழத்தின் ந யிலுமிருந்து அடியவர்கள் திரண்டு வந்து தே வழாவை கோலாகலமாக நடத்துவது எ பேரானந்தத்தைத் தருகின்றது.

சென்ற மார்கழியில் ஐயனாருக்கும் கைக்கும் புதிய தேர் அமைத்து தேர் முட்டிக் மெருகு ஊட்டினார்கள் பின்னர் பங்குனி ம வத்திற்கு தேவையான பெரியசப்பறம் அமை தந்தார்கள். இன்று கூத்தப் பெருமானுக்கு சித்திரத் தேர் அமைக்கப்பட்டுவிட்டது. 19 அமைக்கப்பட்ட இத்திருப்பணிச் சபை கோயி களை விரைவாகவும் அழகாகவும் முன்னெ செல்லும் ஆற்றல் வியந்து பாராட்டப்பட டிய ஒன்று என்று நாம் இங்கு குறிப்பிட்டே வேண்டும்.

இத் திருவெம்பாவைப் பெருவிழாவின் திருவிழா மிகவும் சிறப்பாக அமைய வேண் சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெரு டையதும் பூரணை புட்கலை சமேத ஐயனாரு தும் அருட்கிருபை கிடைக்கப்பெற ஆண்ட பிரார்த்திக்கின்றோம்.

ஆ. அம்பலவி முரு
மு. சுந்தாலிங்
ஆதீன கர்த்தாக்

காரைநகர் சிவன்கோயில்.

## அசைந்து வரும் அழகு பாரீ

பஞ்சரதத்தில் பவனிவந்து
பக்தர்கள் புடை சூழ்ந்திடவே
அஞ்சலென்ற பய கரமளித்தே அணிய
அசைந்து வரும் அழகு பாரீர்!
தஞ்சமென்று வந்தே சரணடைந்தே
தில்லை நடராஜனே!
வெஞ்சமரொழித்து எம் வேதனை தீர
வேண்டும் வரமருள்வாயே!

**மலரமைப்பு: காரைநகர் செய்தியாளர்**



## மலர் பொலிவுற உதவிய வர்த்தகப் பெருமக்கள்:-

சிவகணேசன் ஸ்ரோஸ், 41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

சீமாட்டி புடைவைக்கடல், 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

வெங்கடேஸ்வரா, 79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சிறி மாதவன் 97, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

இளவரசி ரெக்ஸ்ரைல், இல. 57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

லலிதா ரெக்ஸ், இல. 5, 6, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

மகாராணி பட்டுச் சோலை, 50, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

கஜமுகன் ஹாட்வெயர், 147, 149 வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பு சேவை, 303, K.K.S வீதி, சிவன் கோயில் வீதி, யாழ்ப்பாணம். காரைநகர்.

இ. ச. பேரம்பலம் சக நிறுவனம், 50, 52, 54, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

க. கனகசுந்தரம் பல்பொருள் வாணிபம், 152, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

யோ. சிவரஞ்சன், பலசரக்கு வியாபாரம், 45, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

அற்புதா ரேடிங் கொம்பனி For Stationery, 198, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லையெனாது வரமீன்று அருள் புரியும் தில்லை நடராஜனின் ஈழத்துச் சிதம்பரம்

இலங்கையில் உள்ள பழம் பெரும் ஆலயங்களுள் காரைநகர் திண்ணபுரத்தில் எழுந்தருளியுள்ள சுந்தரேஸ்வரப் பெருமானின் ஆலயமும் ஒன்றாகும். மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய ஸ்தல சிறப்புக்களைப் பெற்ற இவ்வாலயம் தென்னகத்தில் தலைமை பெற்று விளங்கும் சிதம்பரத்தில் நிகழும் கிரியை மரபுகளைப் பின்பற்றும் பாரம்பரியச் சிறப்புப் பெற்றது. இதனால் இத்தலத்திற்கு ''ஈழத்துச் சிதம்பரம்'' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

ஒல்லாந்தர் ஆட்சி வீழ்ச்சியுற்றுஆங்கிலேயர் ஆட்சி மலர்ந்திருந்த காலத்திலே இராமநாதபுரம் சேதுக்கரையைக் காவல்செய்த மறக்குடி மரபினரான ஆண்டி என்னும் பெரியார் இலங்கைக்கு வந்து பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு இறுதியில் காரைதீவிலுள்ள வியாவில் ஐயனாரிடம் வந்தார். அப்போது ஐயனார் கோயில் முன்பிருந்த சிறப்புக்கள் யாவற்றையும் இழந்து அழிந்திருப்பதைப் பார்த்து மனவருத்தமடைந்தார்.

இப்பெரியாரது மனக்குறையை நீக்க எண்ணிய இறைவன் கனவிலே தோன்றி 'நீயே நான் நானே நீயாம் ஊருக்கு வடக்கே துர்வாசகிரிக்குச் சமீபமாய் அரசமரத்தின் கீழ் இருக்கின்றேன்' என்று கூறி மறைந்தருளினார். உடனே பெரியார் திருவருளை மிகவும் வியந்து குறித்த இடத்தை அடைந்து அரசமரத்தைக் கண்டுபிடித்து அதன் சுற்றாடல் எங்கும் தேடினார். காணமுடியவில்லை இறைவன் வாக்குப் பிழைக்காது என்று எண்ணியவராய் கனவின் பலன் கைகூடும் வரை அங்கேயே அமரத் திருவுளங் கொண்டார். அரச மரத்தடியில் தன்னுடன் கொண்டுவந்த சூலத்தை நட்டு அதில் வைரவரை இருத்தி ஆத்மார்த்த பூசைசெய்து வழிபட்டார்.

ஆண்டியர் வந்த 'திண்ணைக்களி'' என்னும் இடம் 400 பரப்பு விஸ்தீரணம் உடையது. இது காரைநகரைச் சேர்ந்த அம்பலவி முருகர் என்னும் பெரியாருக்கு முதுசொத்தானது.

ஐயனாரின் வேண்டுகோளின் படி ஆண்டியார் ஒருவர் திண்ணைக்களிக்கு வந்த செய்தியை அறிந்த அம்பலவி முருகருக்கு அவ்வூராரும் பக்திப் பரவசம் அடைந்து அங்கு வந்து ஆண்டியாரைக் கண்டு வணங்கினர் ஆண்டியாரின் வழிபாட்டில் பங்குபற்றிய அவர்கள் வைரவர்சூலம் நட்ட இடத்தைச் சுற்றி ஒரு குடில் அமைத்துக் கொடுத்தனர். அன்று தொடக்கம் அம்பலவி முருகர் ஆண்டியாருடன் பெருநட்புக் கொண்டு வழிபாட்டிற்குத் தேவையான சகல உதவிகளையும் செய்து வரலாயினர்.

ஆண்டியார் திருவுருவைத் தேடிக்காணாதவராய் மனம் நொந்து கொண்டு இருந்தார். ஒருநாள் அரச மரத்துக்கு தென்கிழக்குப் பக்கமாக நிலத்தினுள் ஒளித்தீபம் ஒன்றை ஆண்டியார் கண்டார். உடனே ஆண்டியார் அவ்விடத்துக்குச் சென்று நிலத்தை அகழ்ந்தபோது பூரணை புட்கலை சமேத ஐயனார் திருவுருவம் கிடைக்கப்பெற்று பேரானந்தப் பரவசம் ஆனார், திருவருளை வியந்து அத்திருவுருவத்தை சூலத்துடன் வைத்துப்பூசை வழிபாடுகளைத் தவறாது செய்து வந்தார். ஆண்டியால் தோண்டப்பட்ட கேணி 'ஆண்டிக் கேணி' என்றும் ஐயனார் 'ஆண்டிக்கேணி ஐயனார்'' என்றும் பிற்காலத்தவரால் வழங்கப்படலாயிற்று

இந்த ஐயனார் திருவுருவம் பறங்கியர் சைவாலயங்களை இடித்து அழித்த காலத்தில் யாரோ ஒரு சைவ அபிமானியால் சேமமாகப் பூமியிற் புதைத்து வைத்ததாய் இருக்கலாம் என்று தோன்றுகின்றது. அந்த அரச மரம் சிவன் கோயிலின் தெற்கு வீதியில் இன்றும் பெரிய கிளைகளோடு பரந்து விளங்குதலைக் காணலாம்.

ஆண்டியாருடன் இருந்த அம்பலவி முருகர் அரச மரத்துக்கு வடக்கேயுள்ள உயர்ந்த நிலத்தில் ஐயனார் கோயிலைக் கட்டுவித்து ஐயனாரைப் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகத்தை நிறைவேற்றினார். சில காலத்தின் பின் அம்பலவி முருகன்ஐயனார் உற்சவ மூர்த்தியை பிரதிஷ்டை செய்ய விரும்பி ஐயனார் உற்சவ மூர்த்தியை சிற்பாசாரி மூலம் சிறப்பாக வார்ப்பித்தார். அவ்வுருவினை உளியினால் ஆசாரி செப்பஞ் செய்யத் தொடங்கியபோது செதுக்கப்பட்ட இடத்தில் இருந்து உதிரம் பெருகியதைக் கண்டு வியப்புற்றவராய் செப்பம் செய்யாமலே அம்பலவி முருகரிடம் ஒப்படைத்தார். ஐயனாரின் திருவுருவம் செப்பம் செய்யப்படாமலேயே கும்பாபிஷேகம் செய்யப்பட்டு பூஜிக்கப்பட்டு வருகின்றது. இதனை இன்றும் காணலாம்.

ஐயனாரது கும்பாபிஷேகம் நிகழ்ந்த பின்னர் அவரது அருட்பெருக்கம் காரைநகர் எங்கும் அருளாட்சி செய்தது திண்ணபுரத்தை அண்டிய பகுதிகளில் அதிகாலையிலும், மாலைவேளைகளிலும் ஐயனாரின் வாகனமாகிய குதிரைகள் ஓடும் ஒலியையும் சதங்கை ஒலியையும் சங்க நாதமும் மக்கள் கேட்டு ஐயனாரின் மகிமையை வியந்ததாக முதாதையர் கூறுவர்.

இறைவன் திருவருளை வியந்த முருகர் சிதம்பரம் சென்று சிற்பாசாரியாரை அணுகி தாம் வந்த நோக்கத்தைத் தெரிவித்தார். அவரிடம் இருந்த பதினொரு சிவலிங்கங்களையும் பேரானந்தத்துடன் முருகர் நோக்கினார். அப்போது ஏழாவது சிவலிங்கத்தில் இருந்து ஒளி முகில் போன்று ஆவி எழுவதைக் கண்டு இறைவனது அருட்குறிப்பென்சிரமேல் வைத்து எந்த நேரமும் கருணை பொழியும் அவ்வான இலிங்கத்தினைப் பெறுவதாக நிச்சயித்து அதன் விலையைக் கேட்டபோது பதினொரு 'வராகன்' என்றார் சிற்பி. அவ்வளவு பணம் தம்மிடம் இல்லையே என்று வருந்தி அவ்விடத்தை விட்டகன்றார். அவர் அன்றிரவு சிற்பியின் கனவில்தோன்றி இறைவன் பத்து வராகனுக்கு கொடுக்கும்படி ஆணையிட்டார். மறுநாள் சிற்பி



முருகரிடம் பத்து வராகனைப் பெற்றுக்கொண்டு அவ்விலிங்கத்தினை ஒப்படைத்தார்.

1963 ஆம் ஆண்டு முதன் முதலில் திருப்பணிச்சபை உருவாக்கப்பட்டு இச்சபையினரால் கருங்கல்லினால் சிவன் அம்பாள், கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியன அழகுற அமைக்கப்பட்டன. இன்றும் விநாயகர், சுப்பிரமணியர், சண்டேஸ்வரர், நாலவர் கோயில்கள் புதிதாக அமைக்கப்பட்டன. நடேசர் கோயிலும் திருத்த வேலைகள் செய்யப்பட்டுப் புதுப்பிக்கப்பட்டு 10-07-1970 இல் ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன ஐந்தாவது மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

ஈழத்துச் சிதம்பரம் என்ற இவ்வாலயம் தூலலிங்கமாகிய இராஜகோபுரத்தைத் தன்னகத்தே அடக்காமல் இருந்தது ஒரு பெருங் குறையாகும். அக்குறையை நீக்குவதற்குத் திருவருள் பாலித்து முன்னைய திருப்பணிச் சபையினரால் 08 – 09 – 1965 இல் சிவன் கோபுரத்துக்கான அத்திவாரம் இடப்பட்டது சிவன் கோபுரத்தோடு சேர்த்து ஐயனாருக்கும் கோபுரம் அமைக்க வேண்டும் என்று பல அடியார்கள் வற்புறுத்தியமையால் கோபுர வேலை தடைப்பட்டது. பின்னர் ஐயனார் கோபுரத்துக்கு 07-02-1979 ஆம் ஆண்டு அத்திவாரமிட்டு நிலமட்டம் வரை கட்டப்பட்டது.

1982 ஆம் ஆண்டு தற்போதைய திருப்பணிச் சபை தெரிவு செய்யப்பட்டு ஐயனார், சிவன் கோபுரக் கட்டுமான வேலைகள் தாமதமின்றி ஆரம்பிக்கப்பட்டன. தென்னாட்டுச் சிற்பங்களை ஒத்த சிற்ப அம்சங்கள் கோபுரங்களில் மிளிர ஏக நேரத்தில் வானளாவிய இரண்டு இராஜகோபுரங்களும் வளர்ந்து ஐயனாரது கோபுரம் திரிநிலை மாடங்களுடனும் சிவனது கோபுரம் பஞ்சநிலை மாடங்களுடனும் அமைந்து ஏழெட்டு வருடங்களில் கோபுர நிர்மாண வேலைகள் பூர்த்தியடைந்தன.

1988 ஆம் ஆண்டு மூலமூர்த்திகள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு கருவறைகளும் தூபி களும் [illegible] 1991 ஆம் ஆண்டு கும்பாபிஷேகத்திற்கான [illegible] நடைபெற்ற வேளையில் இவ்வூரில் ஏற்பட்ட போர்ச் சூழலினால் பெரும்பான்மையான மக்கள் வெளியூர்களுக்கு இடம்பெயர்ந்தனர் இதனால் கும்பாபிஷேக முயற்சிகள் யாவும் தடைப்பட்டன. இக்காலத்தில் காரைநகருக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையிலான தரைவழித் தொடர்பு ஐந்து வருடங்களுக்கு மேலாகத் தொடர்ந்து துண்டிக்கப்பட்டிருந்தது.

பின்னர் இவ்வூர் மக்களின் மீளக்குடியமர்வுடன் திருப்பணிச் சபையினரின் பெருமுயற்சியால் 1998-06-07 இல் மூலமூர்த்திகளுக்கும் அருகருகே அமைந்த ஐயனார், சிவன் இராஜ கோபுரங்களுக்கும் ஒன்றாக மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

இந்தியாவில் உள்ள சிதம்பரத்தில் நடைபெறுவது போன்று பூசை முறைகளும் திருவாதிரை உற்சவமும் நடைபெறும். இவ்வாலயத்தில் இன்று 22-12-99 புதன்கிழமை நடராசப் பெருமானும் ஏனைய பரிவார மூர்த்திகளும் பஞ்ச இரதங்களில் மூன்றாம் வீதியில் பவனி வரும் காட்சி ஆனந்தமானது, அற்புதமானது.

திருவாதிரை விழாவில் உதயத்தில் நிகழும் ஆர்த்திர தரிசனம் முடிந் பின் பகல் முழுவதும் ஒன்றன்பின் ஒன்றாக நூற்றுக்கு மேற்பட்ட காவடிகள் இத்திருக்கோயிலுக்கு வந்து தாங்கள் தங்கள் நேர்கடன்களை முடித்துச் செல்லும் பெரும்பாலான நேர்த்திகள் ஐயனாருக்கே உரியனவாகும்.

ஈழத்துச் சிதம்பரம் என்னும் இத்திவ்விய தலத்திலே புலரிக்காலத்தில் நிகழும் அபிடேகமும் ஆராதனையும் அதன்பின் பகல்முழுவதும் வந்துகொண்டிருக்கும் காவடியாட்டங்களும் பிற்பகல் ஐந்து மணிக்குப் பின் நிகழும் திருவூடலும் கண்கொள்ளாக் காட்சியாகும்.

திருவெம்பாவை உற்சவம் நடைபெறும் பத்து நாள்களின் பின் நான்கு நாள்களும் மணிவாசகர் சபையினரால் திருவாசக விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது கடந்த காலங்களில் தமிழகத்தில் இருந்து அறிஞர்கள் வருகைதந்து இவ்விழாவைச் சிறப்பித்துள்ளனர் இம்முறை உள்ளூர் அறிஞர்களே இவ்விழாவில் கலந்து சிறப்பிக்கின்றனர்

## நடராசா பாரதி

திருவிழாக் காலங்களில மாணிக்க வாசகர் மடாலய அன்னதான சபையும் சிவாச்சிரமமும் இலங்கையின் பலபாகங்களில் இருந்து வருபசிவனடியார்களின் அரும்பசி களைவதற்கு அன்னதானம் செய்து வருகின்றனர். இம்முறையும் மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையினர் அடியார்களுக்கு பத்து நாள்களும் அன்னதானம் வழங்கி வருகின்றனர்.

திருவிழாக் காலங்களில் அடியர்களின் போக்குவரத்து வசதி கருதி வ. பி. போ. ச. காரைநகர் சாலை விசேட பஸ் சேவையை நடத்தி வருகின்றது.

கடந்த பத்து ஆண்டுகளின் பின்னர் இரண்டாவது தடவையாக நடைபெறும் இத்திருவாதிரை உற்சவத்தைக் கண்டுகளிக்க குடாநாட்டின் பல பாகங்களில் இருந்தும் பெருந்திரளான மக்கள் ஒன்று கூடுவர் என எதிர் பார்க்கப்படுகின்றது. இவர்களுக்கு ஈழத்துச் சிதம்பர சௌந்தராம்பிகை சமேத சுந்தரேஸ்வரப் பெருமானின் திருவருள் கிடைக்கப் பிரார்த்திப்போமாக. ★


புத்தம் புதிய துவிச்சக்கர வண்டிகளுக்கும்மற்றும் உதிரிப்பாகங்களுக்கும்
நித்தம் நீங்கள் நாடவேண்டிய இடம்:

**ஈஸ்வரன் ரேடஸ்**

69, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 - 2813



மோட்டார் சைக்கிள் உதிரிப்பாகங்கள் மற்றும் பலபொருள் வாணிபம்
கொழும்பு-யாழ். ரான்ஸ்போட் ஏஜென்ட்

**மகாலக்சுமி ஸ்ரோர்ஸ்**

212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 - 2024, 021 - 2025


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவஆட்சிக்குஎதிராக நாடளாவிய போராட்டம்

## பாக்.முன்னாள் பிரதமர் ஷெரீப் அழைப்பு

இஸ்லாமாபாத், டிசெ. 22 பாகிஸ்தான் இராணுவ ஆட்சியாளர்களுக்கு எதிராக அரசியல் ரீதியாக நாடளாவிய போராட்டம் நடத்துமாறு பதவி கவிழ்க்கப்பட்ட முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தமது கட்சித் தொண்டர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சிறையில் இருந்தவாறு இந்த அழைப்பை அவர் விடுத்துள்ளார்.

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சியின் தலைவரானஷெரீப் —நாடு தழுவியதாக மோதல்கள் அற்ற முறையில் போராட்டம் நடத்துமாறும் வன்செயல்களுக்கு இடம் அளிக்கக் கூடாது என்றும்— தமது அழைப்பில் கட்கியின் தொண்டர்களைக் கேட்டுள்ளார்.

அதே சமயம் —

இராணுவ ஆட்சியாளர்களுன் மோதல்களைத் தவிர்க்குமாறும் — மோதல்களை ஏற்படுத்தினால் அவர்கள் பாரதூரமாக எதையும் செய்வார்கள் என்றும்— முஸ்லிம் லீக் தலைவர்கள் ஆலோசனை கூறியுள்ளனர்

### இராணுவப் பயிற்சி

வட அரபிக் கடலில் கடந்த இரு வாரங்களாக இந்திய இராணுவப் படை நடத்திய இலக்கு நோக்கித் தாக்கும் திறன் காட்டும் பயிற்சிநேற்று முன்தினம் முடிவடைந்தது.

இந்த பயிற்சியில் நவீன நீர் மூழ்கிக் கப்பல்கள் உட்பட முப்பது போர்க் கப்பல்களும் விமானப்படை மற்றும் தரைப்படையின் விமானங்கள் என்பனவும் கலந்து கொண்டன.

இந்தப் பாரிய பயிற்சியில் ஏவுகணைகளும் ஏவப்பட்டன.

### புதிய தாக்குதலுக்கு ரஷ்யா தயார்

மொஸ்கோ, டிசெ. 22 செச்சினிய குடியரசின் தென்மலைப் பகுதிகளில் கிளர்ச்சியாளர்கள் மீது புதிய தாக்குதலை நடத்த ரஷ்யப் படைகள் தயாராகி வருகின்றன.

தலைநகர் குறோஸ்னியின் புறநகர்ப் பகுதிகளில் தரைப் படை மோதல்களோடு கிளர்ச்சியாளர்களின் நிலைகள் மீது வான்தாக்குதல்களையும் பீரங்கித் தாக்குதல்களையும் ரஷ்யப் படைகள் தொடர்ந்து மேற்கொண்ட வண்ணம் உள்ளன.

கடந்த 24 மணி நேரத்தாக்குதலின் போது நாற்பது கிளர்ச்சியாளர்கள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-3)

### கைதடி, உசன் பகுதிகளுக்கு மின்சாரம்

கைதடி, உசன் ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் வழங்க இலங்கை மின்சார சபைக்கு ஜெனரேற்றர்கள் வந்துள்ளன.

ஏற்கனவே உள்ள ஜெனரேற்றர்களுடன் மேலதிகமாக இவை பொருத்தப்பட்டு மின்சாரம் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டது.

### ஆளும்கட்சி முன்னணியில்

மொஸ்கோ, டிசெ. 22 ரஷ்ய நாடாளுமன்றத் தேர்தலில் ஆளும் ரஷ்ய ஐக்கிய கட்சி முன்னணியில் உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

450 ஆசனங்களைக் கொண்ட நாடாளுமன்றத்துக்கு இடம்பெற்ற தேர்தலில் வாக்குகள் எண்ணி முடிக்கப்பட்டபோதும் உத்தியோகபூர்வ முடிவுகள் அறிவிக்கப்படவில்லை.

ஆனாலும் ஆளும் ஐக்கிய கட்சி முன்னணியில் இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. [க-3]

## 25 ஆயிரம் பேர்வரை பலி

வெனிசுலாவில் ஏற்பட்ட பெரும் வெள்ளப் பெருக்கு மற்றும் மண்சரிவுகளில் சிக்கி 15 ஆயிரம் முதல் 25 ஆயிரம் பேர் வரை உயிரிழந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பல ஆயிரக் கணக்கானோர் காயமடைந்துள்ளனர். பல லட்சம் மக்கள் தமது வீடுகளைவிட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

மீட்புப் பணிகள்தொடர்ந்து இடம் பெற்றுவருகின்றன.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என்று மீட்புப் பணியாளர்கள் தெரிவித்தனர். மீட்புப் பணிகளுக்கு உதவுவதற்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்குமென மருந்துப் பொருள்கள் உட்பட பல லட்சம் டொலர் பெறுமதியான உதவிப் பொருள்களை உலக நாடுகள் வெனிசுலாவுக்கு அனுப்பி வைத்துள்ளன.

எனினும் வெளிநாடுகளில் இருந்து கிடைத்த உதவிகள் இந்த தேசிய பேரனர்த்தத்தை சமாளிப்பதற்கு போதுமானதாக இல்லை என்று வெனிசுலா அரசு தெரிவித்துள்ளது. (இ-6-9-5)

## கண்ணீர் அஞ்சலி

யா / தாவடி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
விஞ்ஞான ஆசிரியர்

அமரர்

### சிவசுப்பிரமணியம் சிவகுமாரன்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள்.
பாடசாலை அபிவிருத்திச்சங்கம், பழையமாணவர்கள்.
யா \ தாவடி இந்து த. க. பாடசாலை.

(71954)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
|---|---|
| 13 | 05 |
| 03 | 01 |
| 1956 | 1996 |



### அமரர் முத்துக்கிருஷ்ணர் சிவகுமாரன்

(குமார்)

திதி; 22 -12 – 99

குமாரா!

அன்பென்னும் சொல்லுக்கு
பொருள் சொன்ன உத்தமனே!
அறிவென்னும் விருட்சத்தின்
ஆணிவேராய்த் திகழ்ந்தவனே
இன்புற்று இவ்வுலகில்
இனிதே வாழ்ந்திடுவாய் – என்றிருந்தோம்
துன்பத்தில் எமை ஆழ்த்தி
தொலை தூரம் சென்றதேனோ
புண்பட்ட நெஞ்சுடனே
நின் பூ முகம் காணாமல்
நாமிங்கே வாடுகின்றோம்.

உன் நினைவில் வாழும்
பிள்ளைகள்- தாய்,
சகோதரர்கள், சகோதரிகள்

காளிகோயிலடி,
மல்லாகம்.

(சி/10285)

## 31 ஆம் நாள் நினைவினில்



செல்வன்

### தேவராசா நிவேதன்

| நெஞ்சமினிக்க | நெஞ்சங்குலைய |
|---|---|
| 27 - 04 - 1995 | 22 - 11 - 1999 |

அகம் மகிழ்ந்து அன்பு கொள்ள
நம் நிவேதன் நமக்கு வந்தான்; நம்
முகம் இருண்டு நொந்து நிற்க
தந்தவனே எடுத்துக் கொண்டான்!
சுகம் கொண்ட மனங்களிங்கு
சுக்கு நூறாய் வெடிக்குதையா;
இகம் விட்டு இறை சேர்ந்தாய்
என்பதாலே துடிக்குதையா...
அவனருளால் நோய் நீங்கி
நீவருவா யென்றிருந்தோம்
இவ னெமக்கே உரியன் என்று
அவனே உனையாக்கிக் கொண்டான்!
நவமான மும் மணியில்
மூன்றாம் முத்தே நம் நிவேதா
உவந்து உனைமீட்டுக் கொண்டோன்
உனக்கருள்வான் சாந்தியினை

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

என்று சாந்தி வேண்டும்
அன்பு அப்பா, அம்மா, உடன்பிறப்புகள்.

வாகையடி வீதி,
மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.

(71956)


எதிர்பார்த்தீர்களா?

SUBRAவில்(14)

(சித்தன்கேணி)

நாளை

2002 A/L

ஆரம்பம்

| | |
|---|---|
| ★ PHY | ஜெயம் கருணாநிதி |
| ★ C. MAT | பிரதீபன் |
| ★ CHE | எட்வேட் |
| ★ BIO | கஜன் |
| ★ IQ | தவசேகர் |
| ★ ACC | D. SAM |
| ★ ECO | ஜெயகுமார் |
| ★ COM | நந்திஸ் |
| ★ TAM | சரந்தன் தமிழேந்திரன் |
| ★ Hi,Cu | ஸ்ரீஸ் |
| ★ LOG | பவன் |
| ★ DARA | A C. பிரான்சிஸ் |
| ★ GEO | உங்கள் ஆசிரியர் |
| ★ P.Sc | ரெவபின்சன் |
| ★ HIST | அன்ரன் |
| ★ ENG | சூரி |

23-12-99

வியாழன் 8.00

(71919)


## பலாலி ஆசிரியர் கலாசாலை

மாணவர் மன்றத்தின்

'கலாவதி'

### நூல் வெளியீட்டு விழா

இடம்: கலாசாலை சுப்பிரமணியம் மண்டபம்
காலம்: 23-12-1999 வியாழன் மு. ப. 9. 30 மணி
தலைவர்: திரு. ந. சர்வேஸ்வரன்

நிகழ்ச்சிகள்

- ★ அகவணக்கம்
- ★ வரவேற்புரை: திரு. கே. நமசிவாயம்
- ★ தலைவர் உரை
- ★ ஆசியுரை: திரு. கு. சதாசிவமூர்த்தி (அதிபர்)
- ★ வாழ்த்துரை: திரு. ச. லலீசன். (தலைவர், மாணவர் மன்றம்)
- ★ வெளியீட்டுரை: பேராசிரியர் க.சின்னத்தம்பி (தலைவர், கல்வியற்றுறை, யாழ் பல்கலைக்கழகம்
- ★ முதற்பிரதி பெறுபவர்: கலாநிதி காரை செ.சுந்தரப்பிள்ளை
- ★ ஆய்வுரை: திரு. சி.சிவசரவணபவன்(சிற்பி) M. A. Dip-in-Ed (இளைப்பாறிய அதிபர்)
- ★ ஏற்புரை: திரு. சு. ஸ்ரீகுமாரன்
- ★ நன்றியுரை: திரு. இ. கோகுலராகவன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

- மாணவர் மன்றம்

► குறிப்பு: சகல ஆசிரிய மாணவர்களையும் விளம்பரம் தந்துதவிய வர்த்தகப் பெருமக்களையும் சமுகம் தருமாறு வேண்டுகின்றோம்.

(71957)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

எமது சங்கப் பணியாளர்
செல்வி கார்த்திகேசு வரதா
அவர்களின் அன்புத் தந்தையார்

**கணபதிப்பிள்ளை கார்த்திகேசு**

அவர்களின் மறைவை ஒட்டி துயருற்று இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணிப்பாளர்கள், பணியாளர்கள்.
புங்குடுதீவு – நயினாதீவு ப. நோ. கூ: சங்கம்
(சி/10236)

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 12 – 12 – 1959
மறைவு 22 – 12 – 1984

அமரர்
**T. A. செல்வக்குமாரன்**
(முன்னாள் ஆங்கில ஆசிரியர்,
மன்னார் நறுவிலிக்குளம் றோ. க. பா.)

மரணத்தை மணந்து எம்மை நீ பிரிந்து விட்டாய்!
மண்ணிலே நீ வளர்க்க விண்ணுக்கு விருந்தானாய்!
செல்வக்குமாரன் எனச் செல்லமாய் நாமழைக்க
நீ சொரிந்திடும் அன்பை இப்பூவுலகில் காண்பதெப்போ?
ஆண்டுகள் பதினைந்தல்ல பதினையாயிரம்தான்
ஆனாலும் ஆறாது எம் துயர்!

உன் பிரிவால் வாடும்
ஐயா, அம்மா, அக்காமார் அத்தான்மார்,
அண்ணாமார், அண்ணி, தங்கை, தம்பிமார்.
மருமக்கள், சசிகலா, சர்மிளா, செல்வக்குமார், செந்தூரன்.

வடக்குத் தெரு, தொண்டமனாறு,
வீ. எம். றோட், பருத்தித்துறை (71845)

# நீங்காத நினைவலையில் ஓராண்டு



**அமரர் கந்தசாமி சுந்தரலிங்கம்**
(பற்றினி மரக்காலை, சுப்பர்மடம்)

மண்ணில்: 19 – 06 – 1952
விண்ணில்: 02 – 01 – 1999

திதி: **23 – 12 – 1999**

ஆண்டொன்று மறைந்ததையா
ஆனால் உங்கள் அன்பு முகம் மறையவில்லை!
ஐயா! ஆறாத் துயரில் எம்மை மூழ்கவிட்டு
ஆண்டவன் காலடியில் சேர்ந்தீர்கள் – ஐயா
உங்கள் ஆத்ம சாந்திக்காக எல்லாம் வல்ல
இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரமக்கள், பேரப்பிள்ளைகள்.

வியாபாரி மூலைச் சந்தி, பருத்தித்துறை. (71842)

## அதிபர்களுக்கான கலந்துரையாடல்

பருத்தித்துறை, டிசெ. 22

பாடவிதான அமுலாக்கல் திட்டம் வருடாந்த பாட மேம்பாட்டு அமுலாக்கல் திட்டம் தொடர்பாக வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி முற்பகல் 8.30 மணிக்கு வலயக் கல்விப்பணிப்பாளர் சி சிவராசா தலைமையில் புலோலி மெதடிஸ்த மிஷன் வித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

வடமராட்சி வலயத்துக்கு உட்பட்ட சகல அதிபர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அதிபர்கள் கலந்துரையாடலுக்குச் சமுகமளிக்கும் போது ஆறாண்டுக்கான செயற்திட்டம், பாடசாலைகளுக்கு தேவையான கட்டடம், தளபாடம், உபகரணங்கள் என்பன பற்றிய விவரங்களும் கல்வி அபிவிருத்திக்கான முன்மொழிகளும் உள்ளடக்கியதாக அமைதல் வேண்டும் என வடமராட்சி வலயத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

(-3-118)

## திருவாசக விழா

காரைநகர், டிசெ. 22

காரைநகர் மணிவாசகர் சபையின் ஆதரவில் நடைபெறும் திருவாசக விழாவின் இறுதிநாள் நிகழ்வு இன்று புதன்கிழமை இரவு 7 00 மணிக்கு காரைநகர் சிவன் கோயில் வசந்தமண்டபத்தில் மேற்படி சபைத் தலைவர் செ. தேவதாசன் தலைமையில் நடைபெறும்.

''எத்தனையும் வேண்டும் எமக்கு'' என்னும் தலைப்பில் மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ ஏகநாதன் உரையாற்ற உள்ளார். தொடர்ந்து ''தில்லையம் பலத்தே கண்டேனே' என்னும் தலைப்பில் ஊர்காவற்றுறைபிரதேசசபைபிரதம விதைர் கே பாலசுப்பிரமணியம் அவர்களின் உரையும் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன (இ-73)

## நூலகங்கள்

காரைநகர், டிசெ. 22

வேலணை மேற்கு நடராசா வித்தியாலயத்திலும் அனலைதீவு சதாசிவம் மகாவித்தியாலயத்திலும் புதிய நூலகத்துக்கான கட்டடங்கள் விரைவில் அமைக்கப்பட உள்ளன

(இ-73)


**I.B.S.**
**கல்வி நிறுவனம்**
சுண்டுக்குளி
★ கணிதம் (பகுதி II)
20 வருட மீட்டல்
தரம் 10 & 11
Mr. C.K.B. தயாளன்
FRI 7.30 A.m
★ Gr. 1 முதல் O/L வரை
★ தரம் 5 புலமைப்பரிசில்.
(71940)



**2000 A/L**
**Day Class**
**கலை, வர்த்தகம்**
புதிய பிரிவுகள் ஆரம்பம்
24-12-99 வெள்ளி
மு. ப. 8-30 மணி
யாழ். முன்னணி
ஆசிரியர்கள்
**A/L 2002**
27-12-99 ஆரம்பம்
**கிறிஸ்ரல் சென்ரர்**
நெல்லியடி
(71931)



**மீண்டும்!**
**புதிய அனுமதிகள்**
**இன்று முதல்**
ஜனவரி 02 வரை மட்டுமே வழங்கப்படும்.
(71948)
– அதிபர்


# வாழ்த்துகின்றோம்

யாழ். மத்தியின் மைந்தரின் சாதனை
மாவட்டத்தில் முதல் மாணவன்.

| | |
|---|---|
| சந்திர மோகனதாஸ் சதீஸ்மோகன் | 4 A |
| ரங்கன் கீதப்பிரியன் | ABCC |
| முருகேசன் மயூரன | 3 AB |

ஆகியோரை வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
கொழும்பு பல்கலைக்கழகம்
(சட்டப் பிரிவு)
(71949)

## வல்வை வாலாம்பிகாசமேத வைத்தீஸ்வர சுவாமி தேவஸ்தான

**மார்கழி**


## திருவாதிரை சிறப்பு நிகழ்ச்சி

23-12-1999 வியாழன் அதிகாலை 6-00 மணி நடராஜப்பெருமான் அபிஷேகம் காலை 9-00 மணிக்கு இணுவில் சங்கீத வித்துவான் பிரம்மஸ்ரீ க. இராமநாதன் அவர்கள் சிறந்த பக்கவாத்திய சகிதம் இன்னிசை விருந்தளிப்பார்கள். தொடர்ந்து வசந்த மண்டபபூஜை நடைபெற்று எம்பெருமான் திருநடனக் காட்சி இடம் பெறும்.

– ஆதீனகர்த்தா

(71928)

# சிதம்பரத்தில் தேரேறும் சிவன் தீர்வு தருவான்



ஊர் பிரிந்து மீண்டும் உந்தன்
தேர் இழுக்கக் கூடினோம் தில்லைநடேசா
ஆரெம்மை யிங்கு அரவணைத்துக் காக்க
அனாதையாய் எம்மினம் அழிந்து ஒழிகிறதே
போர் முழக்கம் எங்கும் ஓய்ந்து நாட்டில
புதுயுக மொன்று பிறந்து சமாதானம்வர
பார் முழுதும் தொழுகிறதே திண்ணபுரத்தீசா
பார்வதி ஐயப்பன்சகிதம் தேரேறி வருக.

சிதம்பர நடேசரை தேரிலே தொழுதால்
சீர் மிகுந்த வாழ்வு மிகுத்து விடும்
நிதம் படும் துயரம் நின்று விடும்
நிகரில்லா வளங்கள் பெருகி விடும்
சுகம் தரும் தீர்வு கிடைத்து விடும்
சுப தினமிங்கு மலர்ந்து விடும்
பதமது போற்றி நாம் வாழ்வோம்
பார்வதி ஈசன் அருள் பெறுவோம்.

— மதுரகவி காரை. எம். பி. அருளானந்தன்
(உலகக் கவிதைப் போட்டியில்
முதல் விருது பெற்றவர்)

இன்றைய காரைநகர் ஈழத்துச்சிதம்பர இரதோற்சவ விழா சிறப்புற வாழ்த்துவோர்.

'ராஜா ஸ்ரோர்ஸ்'
இல. 607,
நாச்சிமார் கோயிலடி,
கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

மலர் புடைவையகம்
இல. 18 (167A),
பெரிய கடை வீதி,
யாழ்ப்பாணம்.
(71908)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

பரமசாமி அமிர்தலிங்கம் என்பவருடைய அடையாள அட்டை திருநெல்வேலிச் சந்தையில் தவறிவிட்டது. இதனைக் கண்டெடுத்தவர்கள் இல. 27, ஈச்சமோட்டை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். (71944)

யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சுதாகர் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும் பாடசாலை அடையாள அட்டையும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து யாழ். ரேட் சென்ரர், இல 11, ஆஸ்பத்திரி வீதி, நவீன சந்தை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும் ((71938)

ஆனந்தராஜா கபிலஸ் ஆகிய எனது தேசிய, விசேட அடையாள அட்டைகள் (812162560V -0904022203) மானிப்பாய்க்கும் தட்டா தெருவுக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சங்கானை தெற்கு, சங்கானை என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (71947)

### இறைச்சிக்கோழி

புறொயிலர் இறைச்சிக் கோழி, விறாத்துக்குஞ்சு, பேட்டுக்கோழி விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும்கிடைக்கும். நத்தார் பண்டிகையை முன்னிட்டு குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். தொடர்பு: லக்கி, மதவடி ஒழுங்கை, பலாலி வீதி, திருநெல்வேலி. (71951)

(Broiler) சேவல், பேட்டுக் கோழிகள் தினமும் சுத்தம் செய்து (பாதிக் கோழி உட்பட) பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, (நல்லூர் வீடியோ சென்ரர் அளவு) முத்திரைச்சந்தையடி, நல்லூர் (71806)

இறைச்சிக்கோழி (கல்பேட்ஸ்) விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். க பரராஜசேகரம், நவாலி கிழக்கு, மானிப்பாய் (கிராம அலுவலர் காரியாலயம் முன்பாக). (71937)

### இலகு திருமணசேவை

1966 பூரட்டாதி பாதம் 3 செவ்வாய் 12, பட்டதாரி உயர்தர கொழும்பு உத்தியோகத்தருக்குப் படித்த பொருத்தமான5'' உயரத்துக்குள் மணப் பெண் தேவை. உள்நாடு வெளிநாடு மணமக்கள் தேவைக்கு நாடுங்கள். ஞாயிறுகளில் துரைவிமலா K.K.Sவீதி. நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். [71898]

---


## சுனில் ஆட்ஸ்
## "SUNIL ARTS"

PHOTO CHOROME
SENKADA
MASTER COLOR
வர்ண அச்சு சேவை

29 - 12 - 99 அன்று படச்சுருள் கொழும்புக்கு அனுப்பப்படும்.

**சுனில் ஆட்ஸ்**

272, Stanley Road, Jaffna.

(சி/ 10280)



## வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
## கல்வியாண்டு 2000/2001

பேராதனை, யாழ். கிழக்கிலங்கை பல்கலைக் கழகங்களின் பட்டப்பாட நெறிகளான

★ கலைமாணி B.A ★ வணிகமாணி B.Com
★ விஞ்ஞான மாணி B.Sc கணிதமும்புள்ளிவிவரவியலும்

க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில சித்தி அல்லது பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் பயிற்சி நெறியை மேற்கொள்ளலாம்.

விவரத்தினையும் விண்ணப்பப்படிவத்தினையும் ரூபா25 செலுத்தி நேரில் அல்லது தபால் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

2-1-2000ல் விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

விவரங்களுக்கு
உதவிப் பதிவாளர்

**பட்டப்படிப்புகள் கல்லூரி**

57/13 ஸ்ரான்லி வீதி. யாழ்ப்பாணம்.
(இலங்கை வங்கி முன்பாக)

(71943)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்: 01 — 03 — 1930



மறைவு: 22 — 11 — 1999

### திருமதி வைத்திலிங்கம் செல்லம்மா

அன்பாலே எம்முடன் இணைந்திருந்தீர்!
பண்புடன் எம்மை வளர்த்துவிட்டீர்!
எண்ணமுடியாத தூரம் சென்றதேனோ?
உமை காணும் நாளும் வாராதோ?

அன்னாரின் ஆத்மா சாந்திபடையப் பிரார்த்திக்கும்

மகன்: பால சுப்பிரமணியம் [பாபு]
மருமகள், பேரப்பிள்ளைகள்.

சிங்கராயர் வீதி,
கல்வியன்காடு.

(71939)

---

## காங்கேசன் சிமெந்து நிறுவன ஊழியருக்கு வேலைவாய்ப்பு

வலி.வடக்கு, டிசெ 22

லங்கா சிமெந்து லிமிட்டெட் நிறுவனம் சிமெந்துப் பொருள்களை யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை மேற்கொள்ளவிருக்கின்றது.

இந்த நிறுவனத்தின் தொழிற்சங்கம் கேட்டுக் கொண்டதற்குஅமைவாகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முதல் கட்டமாக தொழில் நடவடிக்கையில் ஈடுபடுவதற்காக ஊழியர்களின் பல்வேறு தரங்களையும் சேர்ந்த 15 ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தொடர்ந்து ஊழியர்கள் அனைவரும் வேலை செய்வதற்கு வாய்ப்பாக மூன்று மாதகாலத்திற்கு ஒரு தடவை என்ற சுழற்சி முறையில் வேலை வாய்ப்பை வழங்குவதெனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(இ-3-86)


## சேகர் எலக்ரோனிக்ஸ் (உடுவில்)

எமது ஸ்தாபனத்தில் திருத்தவேலைக்காகத் தந்த T.V, டெக், றேடியோ முதலியவற்றை சில தவிர்க்க முடியாத காரணங்களால் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பொருள்கள் உடைந்தாலோ அல்லது களவாடப்பட்டாலோ நாங்கள் பொறுப்பாளிகள் அல்லர்.

நிறுவன உரிமையாளர்: M. R. சேகர் (E. E. Ceylon)
அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

(71950) T.P. 070 - 212690



## SCIENCE CENTRE

NELLIADY, KARAVEDDY,

**கணித, உயிரியல் வகுப்புக்கள்**

ஆரம்பம். 22 - 12 - 1999
புதன்கிழமை பி. ப 2-30 [பழைய நேரம்]

– நிர்வாகி

சி/ 10260



## திருமறைக் கலாமன்றம்

### கவின் கலைகள் பயிலகம்
### (SCHOOL OF FINE ARTS)

2000 ஆம் ஆண்டுக்கான
புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.
பின்வரும் பாடங்களுக்கான விண்ணப்பங்கள்
கோரப்படுகின்றன.

- நடனம்
- வாய்ப்பாட்டு
- வீணை
- சித்திரம்
- வயலின்
- ஓர்கன்
- மிருதங்கம்
- கிற்றார்

விண்ணப்ப முடிவு திகதி:- 05 - 01 - 2000

விண்ணப்பப்படிவங்களை அலுவலகத்தில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**திருமறைக் கலாமன்றம்,**
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 2393

(சி/10282)





உ

## சாமியே சரணம் ஐயப்பா!
## ஈழத்துச் சிதம்பரத்தில் இன்று தேர்த்திருவிழா

▼▼▼▼▼▼▼▼▼▼▼▼▼★★★★★★★▼▼▼▼▼▼▼▼▼▼★★★★★★▼▼▼▼▼▼▼▼▼▼▼▼

அந்த சிதம்பரத்தில் நம்பி சரண் புகுந்த நல்லவனைக் காப்பாற்றும் என்றும் உள்ள பரம்பொருள் இனியவன்

**பார்த்தசாரதியின் மைந்தன் மணிகண்டன்**

பிள்ளையார், முருகன், நடேசர், அம்மன், மாணிக்கவாசகர்

ஆகியோர் ஐந்து தேரில் ஆரோகணித்து அருள்மழை பொழியும் கண்கொள்ளாக் காட்சியைக் கண்டு அருள் பெறுவீர்!

**மணிகண்டன் தரகு சேவை நிலையம்**

இல. 42/3, கல்லூரி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம்.

[71952]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கைது செய்யப்படுவோரை இங்கேயே ஆஜர் செய்க

## சட்டமா அதிபர் பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 22
குடாநாட்டில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை யாழ்ப்பாணத்தில் உள்ள நீதிமன்றங்களிலேயே ஆஜர் செய்யவேண்டும் என்று சட்டமா அதிபர் கே கமல சபேசன் வடபிராந்திய பிரதிப் பொலீஸ்மா அதிபருக்கு நேற்றுப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இதுவரை காலமும் கைது செய்யப்படுபவர்கள் அனுராதபுரம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்படுவதும்—

பின்னர் அங்கு சென்று வழக்குகளில் ஆஜராவதும்—தெரிந்தவையே.

இதனால் அவர்கள் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வந்தனர்.

அண்மையில் யாழ்ப்பாணம், பருத்தித்துறை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள் தொடர்பாக அந்த நீதிமன்றங்கள் சட்டமா அதிபருடன் தொடர்பு கொண்டிருந்தன.

அதே நேரம்—

பிரதம நீதியரசர் சட்டமா அதிபருக்கு ஏற்கனவே இது விடயமாகப் பணிப்புரை விடுத்திருந்தபோதும்—

தமக்கு எழுத்து மூலமான உத்தரவு கிடைக்கவில்லை எனத் தெரிவித்து காங்கேசன் துறை பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் கைதிகளை அனுராதபுரத்திற்கு அனுப்பி வந்தமை குறிப்பிடத்தக்கது.

# நட்டஈட்டுத் தொகையை பெற்றுத்தரக் கோரிக்கை

வலி வடக்கு, டிசெ. 22
கடந்த கால வன்செயல்களின்போது ஏற்பட்ட இழப்புக்களுக்குத் தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குத் தருவதாகக் கூறிய நட்டஈட்டுத் தொகை 28 இலட்சத்து 77 ஆயிரம் ரூபாவையும் பெற்றுத்தரும்படி கோரிக்கைவிடப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க பொதுச் சபைக் கூட்டம் தலைவர் சி. சிவமகாராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. அப்பொழுதே இந்தக் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்திவங்கியின் அபிவிருத்தித்திட்டம்—2 இன் கீழ் சங்கத்தின் கட்டடங்களுக்கு ஏற்பட்ட இழப்புக்காக 13 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாவும் தளபாடங்களுக்கு 15 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாவும் தருவதாகக் கூறியபோதும் இத்தொகை சங்கத்துக்கு இன்னும் வழங்கப்படவில்லை என்றும்—

இதைப் பெற்றுத் தரும்படியும்—அரச அதிபர், வடக்கு—கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைப்பிரதிநிதி ஆகியோருக்கு கோரிக்கை விடப்பட்டுள்ளது. (இ-86)

## வெளியீட்டு விழா

பலாலி ஆசிரிய கலாசாலை மாணவர் மன்றத்தின் 'கலாவதி' சஞ்சிகை வெளியீட்டு விழா நாளை வியாழக்கிழமை முற்பகல் 9-30மணிக்கு ந. சர்வேஸ்வரன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் கலாசாலை அதிபர் கு. சதாசிவமூர்த்தி ஆசியுரையையும் மாணவர் மன்றத் தலைவர் ச. லலீசன் வாழ்த்துரையையும் யாழ். பல்கலைக்கழக கல்வியற்றுறைத்தலைவர் பேராசிரியர் க. சின்னத்தம்பி வெளியீட்டுரையையும் இளைப்பாறிய அதிபர் சி. சிவசரவணபவன் ஆய்வுரையையும் நிகழ்த்துவர் நூலின் முதற்பிரதியை கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை பெற்றுக்கொள்வார்

ஏற்புரையை இதழாசிரியர் சு. ஸ்ரீகுமரனும் நன்றியுரையை துணை ஆசிரியர் இ கோகுலராகவனும் நிகழ்த்துவர். (இ-27)

# வீடுகளில் இருந்து கிறிஸ்மஸ் கொண்டாட கரையோரப் பகுதி மக்களை அனுமதிக்குக

## விடுதலைப் புலிகளிடம் யாழ். ஆயர் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிசெ. 22
குடாநாட்டின்கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்கள் தங்கள் வீடுகளில் இருந்தவாறு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட அனுமதிக்குமாறு யாழ்.ஆயர் அதிவண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை விடுதலைப் புலிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

விடுதலைப் புலிகளின் தலைமைப் பீடத்துக்கு அனுப்பி வைத்த கடிதம் ஒன்றிலேயே ஆயர் இவ்வாறு கேட்டிருக்கிறார்.

அக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

கிறிஸ்மஸ் புத்தாண்டுப் பண்டிகைகள் குடும்பப் பண்டிகைகள் ஆகும். இக்காலத்தில் மக்கள் எல்லோரும் தம் குடும்பங்களில் கூடி அன்பாகவும்; அமைதியாகவும் ஆன்மீக முறையிலும் இவ் விழாக்களைக் கொண்டாடுவது வழக்கம்.

இந்த நேரத்தில் கரையோரப் பகுதிகளில் வாழும் மக்கள் இடம்பெயர்ந்து அகதிகளாகப் பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் மழையிலும் குளிரிலும் அவதிப்படுவதைக் கண்டு மனம் வருந்துகின்றோம்.

இந்த மக்கள் விடுதலைப் போராட்டத்திற்கு எந்த வகையிலும் எதிரானவர்கள் அல்லர் என்பதைக் குறிப்பிடும் வேளையில் இப்பண்டிகைக் காலத்தில் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களைக் கருத்தில் கொண்டு அவர்களைத் தம் வீடுகளில் இந்த விழாவினை அமைதியாகக் கொண்டாட அனுமதிக்கும்படி தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அன்பு அழைப்பு விடுக்கின்றோம் — என்றுள்ளது. (3)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், டிசெ.22
கொக்குவில் பகுதியில் நேற்று ஓட்டோ ஒன்று புரண்டதில் அதில் பயணம் செய்த ஒருவர் காயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த பவானந்தன் சஞ்சித்குமார் (வயது 26) என்பவரே காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-3-139)

## வரவேற்பு விழா ஒத்திவைப்பு

கோப்பாய், டிசெ. 22
யாழ்.பல்கலைக்கழக கலை, வர்த்தக, முகாமைத்துவபீட புகுமுக மாணவர்களுக்கான வரவேற்புபசார விழா பிற்போடப்பட்டுள்ளது.

கடந்த 18ஆம், 19ஆம் திகதிகளில் நடைபெற இருந்த இந்த விழா நாட்டின் தற்போதைய சூழ்நிலை காரணமாக அடுத்த மாதம் நடுப்பகுதியில் இடம்பெறுமெனத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த காலங்களில் இத்த விழா நடைபெறும் மட்டும் 'ராக்கிங்' நடைபெறுவது வழக்கம். ஆனால் இந்த ஆண்டு யுத்தநிலை காரணமாக விழா நடைபெறாமலே கடந்த 17 ஆம் திகதியுடன் 'ராக்கிங்' நிறுத்தப்பட்டுள்ளது. (இ-72)

# தாய்வான் சீனாவுடன் மீண்டும் இணையாது

## தாய்வான் பிரதி அதிபர் தெரிவிப்பு

தாய்ப்பே, டிசெ. 22
தாய்வான் நாட்டை மீண்டும் சீனாவுடன் ஒன்றிணைக்கலாம் என்ற சீனாவின் யோசனையை தாய்வான் ஏற்க மறுத்துள்ளது.

போத்துக்கேய காலனித்துவநாடான மெக்கவ் நேற்று முன்தினம் சீனாவிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட சீன அதிபர் சியாங் ஜெமீன் தாய்வான் மீண்டும் சீனாவிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனக் கூறினார்.

சீனா அதிபரின் வேண்டுகோளை மறுத்த தாய்வான் துணை அதிபர், மெக்கவ். ஹொங்கொங், தாய்வான் ஆகியவற்றுக்கிடையே பெரும் வேறுபாடுகள் உள்ளன. மெக்கவ் ஒர் காலனித்துவ நாடு. ஹொங்கொங்கும் அதைப் போன்றதே. ஆனால் தாய்வான் ஒரு காலனித்துவ நாடு நாடு அல்ல என்று கூறினார். (இ-க)

# தென்மராட்சிப் பகுதியில் ஷெல்லினால் மூவர் காயம்

யாழ்ப்பாணம், டிசெ. 22
தென்மராட்சிப் பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை வீழ்ந்து வெடித்த ஷெல்களினால் அந்தப் பகுதிகளைச் சேர்ந்த மூன்று பொதுமக்கள் படுகாயமடைந்தனர்.

நேற்று முன்தினம் அதிகாலை 2.30 மணியளவில் தச்சந்தோப்பு, கோயிலாக்கண்டி பகுதிகளில் சுமார் 15க்கும் மேற்பட்ட ஷெல்கள் வீழ்ந்து வெடித்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவத்தின்போது தச்சந்தோப்பைச் சேர்ந்த திருமதி கே. பரமானந்தன் (வயது 45), என். லக்ஷ்மன் (வயது 17) கோயிலாக்கண்டியைச் சேர்ந்த திருமதி ரீ. மங்கயற்கரசி (வயது 42) ஆகியோரே படுகாயமடைந்தவர்களாவர்.

இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-9-10)

## சேவைக்கால செயலமர்வு

யாழ்ப்பாணம், டிசெ. 22
தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளில் 2 ஆயிரமாம் ஆண்டில் தரம் 7, தரம் 10 வகுப்புகளில் தமிழ் மொழிப் பாட ஆசிரியர்களுக்கான சேவைக் கால செயலமர்வு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியில் உள்ள யாழ்ப்பாணம் பட்டப்படிப்புகள் கல்லூரிகளில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 23, 24, 27, 28, 29, 30 ஆகிய திகதிகளில் நடைபெறவுள்ள இந்தச் செயலமர்வில் விரிவுரைகளை யாழ். பல்கலைக்கழக உயர் பட்டப்படிப்பு பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸ், பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா, பல்கலைக்கழகத் தமிழ் துறை பேராசிரியர் என். சுப்பிரமணிய ஐயர் ஆகியோர் வழங்குவர். (இ-9)

**IBMS இன்**

**புலமைப் பரிசில் திட்டம்**

மேற்படி புலமைப் பரிசில்களுக்கான போட்டிப் பரீட்சை 26—12—99 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறவுள்ளது. வெள்ளிக்கிழமை வரை அனுமதி அட்டை கிடைக்கப் பெறாதவர்கள் நேரடியாகக் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இடம்: யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி
நேரம்: காலை 9.30 [இலங்கை நேரம்]
பாடம்: நுண் அறிவு, பொது அறிவு

Make the right Move
Take the right Step

Join **IBMS**
Computer Training Centre,
No. 701, K. K. S. Road,
Jaffna,

(சி/10266)

எமது புதிய
வீடியோ CD
வெளியீடு

அருண்பாண்டியன்
நெப்போலியன்
நடித்த

சிவன்

வீடியோ விமல்
யாழ்ப்பாணம்

(சி/10289)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி அப்புத்துரை

(குப்பிளான்)

கோப்பாய் வடக்கு பிரமனோடையைப் பிறப்பிடமாகவும் குப்பிளானை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி அப்புத்துரை அவர்கள் நேற்று (21-12-99) காலமானார்.

அன்னார் அப்புத்துரையின் அன்பு மனைவியும் நகுலேஸ்வரி [ஆசிரியை, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொழும்பு), பாஸ்கரன் (கனடா), நகுலேஸ்வரன் (கனடா), கமலேஸ்வரி (கனடா), விக்னேஸ்வரி [டென்மார்க்], ஜெகதீஸ்வரன் [சுவிஸ்), சிறிதரன் (சுவிஸ்), கேதீஸ்வரி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் இராஜதுரை (உரிமையாளர், டேமா ரவல்ஸ், கொழும்பு), யோகேந்திரராணி (கனடா), தர்மவதி (கனடா), குணபாலசிங்கம் (கனடா), லோகநாதன் [டென்மார்க்], சிவகலா [சுவிஸ்], அன்ரன் [பிரான்ஸ்] ஆகியோரின் அன்பு மாமியாரும் சிந்துஜா, அனுஜா, நீரஜா, சுபாங்கி, சங்கவி, டிலக்ஸி, டிலக்ஸன் [கனடா], லாவண்யா, சரண்யா [டென்மார்க்], ஆத்மீகன், சுஜீவன், சுஜானி [சுவிஸ்], இலக்கியா [பிரான்ஸ்] ஆகியோரின் ஆசைப் பேர்த்தியும் இராசேந்திரம் காலஞ் சென்ற வஸ்வலிங்கம், சோமசுந்தரம், சொர்ணமலர், சபாரத்தினம், காலஞ் சென்ற மனோன்மணி ஆகியோரின் அருமைச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று [22-12-99] பி. ப. 2 மணிக்கு குப்பிளான் இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தகவல்:
செ. அப்புத்துரை

குப்பிளான்,
ஏழாலை.

(சி/10290)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொகுதி ரீதியாக சில முடிவுகள்

| மாவட்டம்:- காலி<br>தொகுதி:- காலி | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 22,008 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 20,042 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,207 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- மதவாச்சி | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 24,878 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 16,742 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,875 |

| மாவட்டம்:- பொலநறுவை<br>தொகுதி:- மின்னேரியா | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 24,141 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 18,627 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,849 |

| மாவட்டம்:- கண்டி<br>தொகுதி:- கண்டி | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 10,101 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 13,809 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 639 |

| மாவட்டம்:- பதுளை<br>தொகுதி:- பண்டாரவளை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 23,002 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 20,768 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,339 |

| மாவட்டம்:- காலி<br>தொகுதி:- பாலம்பிட்டிய | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 17,524 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 13,372 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,466 |

| மாவட்டம்:- பதுளை<br>தொகுதி:- வியாலுவ | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 13,336 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 13,003 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 957 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- அனுராதபுரம் மேற்கு | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 25,850 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 23,492 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,017 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- ஹொரவபொத்தானை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 23,075 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 17,732 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,579 |

| மாவட்டம்:- களுத்துறை<br>தொகுதி:- களுத்துறை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 6,169 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 4,403 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 791 |

| மாவட்டம்:- காலி<br>தொகுதி:- பெந்தர எல்பிட்டிய | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 31,626 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 21,196 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 328 |

| மாவட்டம்:- பதுளை<br>தொகுதி:- பதுளை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 16,039 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 13,310 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,125 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- கெக்கிராவ | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 23,631 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 19,151 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,144 |

| மாவட்டம்:- காலி<br>தொகுதி:- ரத்கம | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 28,404 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 19,134 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,497 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- அனுராதபுரம் கிழக்கு | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 25,157 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 20,153 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,996 |

| மாவட்டம்:- பொலநறுவை<br>தொகுதி:- மெதிரிகிரிய | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 23,395 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 20,345 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,709 |

| மாவட்டம்:- பதுளை<br>தொகுதி:- பசறை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 16,558 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 18,124 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 748 |

| மாவட்டம்:- காலி<br>தொகுதி:- கரந்தெனை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 22,445 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 14,882 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 3,157 |

| மாவட்டம்:- மாத்தறை<br>தொகுதி:- வெலிகட | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 30,939 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 19,183 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 3,674 |

| மாவட்டம்:- குருநாகல்<br>தொகுதி:- யாப்பகூவ | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 31,251 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 28,525 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,714 |

| மாவட்டம்:- அனுராதபுரம்<br>தொகுதி:- மிகிந்தலை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 18,131 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 14,393 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,808 |

| மாவட்டம்:- நுவரெலியா<br>தொகுதி:- கொத்மலை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 22,068 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 20,984 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 226 |

| மாவட்டம்:- மொனராகல<br>தொகுதி:- பிபிலை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 21,290 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 19,156 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,337 |

| மாவட்டம்:- அம்பாந்தோட்டை<br>தொகுதி:- தங்காலை | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 29,828 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 22,431 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 9,887 |

| மாவட்டம்:- குருநாகல்<br>தொகுதி:- தொடங்கஸ்லந்த | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 19,594 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 17,011 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 2,283 |

| மாவட்டம்:- குருநாகல்<br>தொகுதி:- பண்டுகஸ்நுவர | |
|---|---|
| சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க (பொ.ஐ.மு) | 22,991 |
| ரணில் விக்கிரமசிங்க (ஐ.தே.க) | 18,484 |
| நந்தன குணதிலக்க (ஜே.வி.பி) | 1,197 |

## யாழ்ப்பாண மாவட்டத்தில் 18.5 வீத வாக்களிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ.22

யாழ். தேர்தல் மாவட்டத்தில் இம்முறை 18.5 வீத வாக்காளர்களே வாக்களித்தனர்.

குடாநாட்டில் சகல தேர்தல் தொகுதிகளிலும் வாக்களித்தோர் எண்ணிக்கை ஆக ஒரு லட்சத்து 15 ஆயிரத்து 123 மட்டுமே.

இது 1998 ஜனவரியில் இடம்பெற்ற உள்ளூராட்சி தேர்தலில் வாக்களித்தோரின் எண்ணிக்கையை விட சுமார் 2 ஆயிரம் வாக்குகள் குறைவு என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் குடாநாட்டில் பதிவுசெய்யப்பட்ட மொத்த வாக்காளர்களின் எண்ணிக்கை 6 லட்சத்து 12 ஆயிரத்து 770 ஆகும்.

இன்று காலை எட்டு மணியளவில் தேர்தல் தொடர்பான திட்டவட்டமான முடிவு கிட்டுமென எதிர்பார்க்கப்பட்டது.

சில தேர்தல் தொகுதிகளில் சந்திரிகா, ரணில் பெற்ற வாக்குகள் விவரம் வருமாறு:-

**நல்லூர்**
சந்திரிகா - 5113
ரணில் - 4815

**ஊர்காவற்றுறை**
ரணில் - 3571
சந்திரிகா - 3555

**காங்கேசன்துறை**
சந்திரிகா - 5324
ரணில் - 2268

**வட்டுக்கோட்டை**
சந்திரிகா - 4485
ரணில் - 2003

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, உடுப்பிட்டி, பருத்தித்துறை, சாவகச்சேரி தொகுதிகளில் ஐக்கியதேசிய கட்சியே முன்னணியில் இருப்பதாக இன்று அதிகாலை கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

யாழ்.மாவட்டத்தில் அதிக வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க பெற்றுக்கொண்டார்.

(ஐ-உ)

## அலரி மாளிகையில் இருந்தவாறே சந்திரிகா நேற்று வாக்களித்தார்

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவரது உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையில் இருந்தவாறே நேற்று தனது வாக்கைச் செலுத்தினார்.

சனிக்கிழமை இடம்பெற்ற குண்டு வெடிப்பில் கண்ணில் காயமடைந்த ஜனாதிபதி வாக்களிப்பு நிலையத்துக்குச் சென்று வாக்களிக்க முடியாத நிலையில் இருந்ததால் இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டது.

ஜனாதிபதி வாக்களிக்க வேண்டிய நிலையம் கம்பஹா மாவட்டத்தில் அமைந்துள்ளது. ஜனாதிபதி அங்கு சென்று வாக்களிக்க முடியாத நிலையில் இருந்ததால் அது குறித்து தேர்தல் திணைக்களத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதி வாக்களிக்க வசதியாக விசேட ஏற்பாடு செய்யமுடியுமா என்பது குறித்தும் -

அத்தகைய ஏற்பாடு செய்வது குறித்து ஆட்சேபனை ஏதும் உண்டா எனவும் தேர்தலில் போட்டியிடும் ஏனைய 12 ஜனாதிபதி வேட்பாளர்களிடமும் கோரப்பட்டு அவர்களின் முழு சம்மதம் பெறப்பட்ட பின்னரே இந்த விசேட ஏற்பாடு செய்யப்பட்டது.

அதனையடுத்து ஜனாதிபதி வாக்களிக்க வேண்டிய நிலையத்தில் இருந்து தேர்தல்பணியாளர் ஒருவர் ஹெலி மூலம் கொழும்புக்கு அழைத்துச் செல்லப்பட்டார். அலரிமாளிகையில் வைத்து நேற்று பி.ப 3.30 மணியளவில் அவரது முன்னிலையில் ஜனாதிபதி சந்திரிகா தனது வாக்கைச் செலுத்தினார். அவரது வாக்கு கடித உறையில் சீல் செய்யப்பட்டு ஹெலி மூலம் மீண்டும் கம்பஹாவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. (ஐ)

## தொண்ணூறு வாக்குப்பெட்டிகள் வெறுமையாகத் திரும்பின!

குடாநாட்டில் வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்ட வாக்குப் பெட்டிகளில் 90 பெட்டிகள் வாக்குகள் எதுவும் இன்றி வெறுமையாக நேற்று மாலை யாழ்.செயலகத்துக்கு திருப்பி எடுத்துவரப்பட்டன.

கொத்தணி முறையில் அமைக்கப்பட்ட 425 வாக்களிப்பு நிலையங்களுக்கும் 525 வாக்குப்பெட்டிகள் அனுப்பப்பட்டிருந்தன.

அவற்றில் 90 வாக்குப்பெட்டிகளே வாக்குகள் எவையுமின்றி வெறுமையாக மீண்டும் செயலகத்துக்கு நேற்று மாலை எடுத்துவரப்பட்டன.

ஒவ்வொரு வாக்களிப்பு நிலையங்களுக்கும் அங்குள்ள வாக்காளர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாக்குப் பெட்டிகள் அனுப்பப்படுவது வழக்கம் என்றும் -

போதிய வாக்குகள் செலுத்தப்படாததால் வாக்குப்பெட்டிகள் வெறுமையாக திரும்பி வந்தன என்றும் -

செயலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

### மன்னாரில் கிரனேட் வீச்சு

மன்னார்,டிசெ.22

மன்னார் நகரில் செபஸ்தியர் கல்லூரியில் அமைந்திருந்த வாக்களிப்பு நிலையத்தில் காவலில் இருந்த பொலீஸார் மீது நேற்று நண்பகல் 11.50 மணியளவில் கிரனேட் வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தத் தாக்குதலில் வாக்களிக்கச் சென்ற சத்தியபாமா சிவலிங்கம் (வயது44)என்ற பெண் காயமடைந்தார்.

புளொட் அமைப்பைச் சேர்ந்தவர்கள் வாக்காளர் சிலரை அந்த நிலையத்துக்குக் கூட்டிச் சென்றதாகவும் - அச்சமயம் காவலுக்கு இருந்த பொலீஸாருக்கும், புளொட் உறுப்பினர்களுக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதாகவும் - கூறப்பட்டது.

இந்தச் சம்பவம் இடம்பெற்ற பின்னரே கிரனேட் வீசப்பட்டது.

இச்சம்பவத்துக்கும் புளொட் உறுப்பினர்களுடன் நடந்த வாக்குவாதத்துக்கும் தொடர்பு இல்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து மன்னார் பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டபோதிலும் நிலமை பின்னர் வழமைக்குத் திரும்பியது. (ஐ-3-164)

### தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

* ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் சுசந்த புஞ்சிநிலமே, மாகாண சபை உறுப்பினர் ரத்னதிலக மற்றும் ஐ.தே.க ஆதரவாளர்கள் வாக்களிப்பை சீர்குலைக்க முனைந்தனர். சில பொலீஸ் உத்தியோகத்தர்களும் அவர்களுக்கு ஆதரவாக நடந்தனர்.

* பதுளையில் பிரதி அமைச்சர் டிலான் பெரேராவின் வீட்டுக்கு ஐ.தே.க குழு ஒன்று கற்களை வீசியது; மொனராகலை நாடாளுமன்ற உறுப்பினர் சொய்ஸாவின் வதிவிடமும் தாக்கப்பட்டது.

* பொது மக்கள் ஐக்கிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினரும் பிரதி அமைச்சருமான எதிரிவீர பிரேமரத்னவுக்கு உயிராபத்தை ஏற்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு அது தோல்வியடைந்தது.

* நீர்கொழும்பில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த சிலரை பொலீஸார் தாக்கமுற்பட்டனர்.

* ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனவின் உதவியாளர்கள் இருவர் வன்முறையில் ஈடுபட்டசமயம் கைதுசெய்யப்பட்டனர்.

* கண்டி மாவட்டத்தில் ஐ.தே.க ஆதரவாளர்கள் ஆயுதங்களுடன் வன்முறையில் ஈடுபடமுயன்றனர்.

* பிபிலையில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஆதரவாளர்கள் தாக்கப்பட்டனர். (ஐ-3-4)

### குடாநாட்டுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை -

ஆனையிறவை அண்டிய பகுதிகளில் நேற்றிரவு முழுவதும் கடும் ஷெல் மற்றும் குண்டுச் சத்தங்கள் கேட்டபடி இருந்தன.

அப்பகுதியில் பெரும் மோதல் எதுவும் மூண்டதா என்பதை இன்று காலை இச்செய்தி அச்சுக்குப் போகும் வரை ஊர்ஜிதம் செய்யமுடியவில்லை. (ஐ-3)

## தொலைபேசி வழமைக்கு!

**நேற்று நள்ளிரவு முதல் செயலிழந்திருந்த குடாநாட்டிற்கான வெளியூர் தொலைபேசிச் சேவை மீண்டும் இன்று அதிகாலை 3.15 மணியளவில் வழமைக்குத் திரும்பியது.** **(முந்திவந்த செய்தி முதற்பக்கத்தில்)**

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 22-12-1999இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org